Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 17 சனிக்கிழமை (31.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 123

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021.222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## மொஹான் பீரிஸ் விவகாரம்; நாடாளுமன்றில் அமளிதுமளி

### 20 நிமிடம் சபை ஒத்திவைப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கு மறுநாள் அதிகாலையில் தான் அலரி மாளிகைக்குச் சென்ற போது, அங்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நின்றிருந்த தாக, பிரதமர் ரணில் விக்ரம சிங்க நேற்று நாடாளுமன்ற த்தில் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகைக்கு வரு மாறு கடந்த 9 ஆம் திகதி அதி காலை 4.00 மணியளவில் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார்.

நான் அங்கு சென்றபோது அங்கிருந்தவர்களில் மொஹான் பீரிசும் அடங்கியிருந்தார்.

அந்த நேரத்தில் அங்கு என்ன செய்கிறீர்கள் என்று அவரிடம் வினவினேன். ஆலோசனை

(19)ஆம் பக்கம் பார்க்க...

## கசினோ திட்டம் நிறுத்தம்

400 மில்லியன் டொலர் முத லீடு செய்யப்படவிருந்த ஆட ம்பர ஹோட்டல் மற்றும் சுற் றுலா மைய செயற்றிட்டத்துக் கான வரிச் சலுகைகளை அர சாங்கம் விலக்கிக்கொள்ள தீர் மானித்துவிட்டதால் அத்திட்ட த்தை முன்னெடுக்கப் போவ தில்லையென ஜேம்ஸ் பக்கரின் கிறவுன் குரூப் கூறியது.

பக்கரின், சுற்றுலா மையம் உட்பட மூன்று வெளிநாட்டு சுற் றுலா மையங்களுக்கான தாராள வரி சலுகைகளை இரத்து செய் யப்போவதாக அரசாங்கம் அறி வித்தது.

புதிய அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தின் காரணமாக தமது கம்பனி இந்தத் திட்டத்தை நிறுத் தப்போவதாக கிறவுன் குரூப் நிறுவனத்தின் பேச்சாளர் கூறி னார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அர சாங்கம் இந்தக் கம்பனிக்கு பல வரிச் சலுகைகளை வழங்கியி ருந்தது.

அந்தச் சுற்றுலா மையங்க ளில் கசினோவை நாம் அனும திக்க மாட்டோம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தி ருந்தார்.

## புதிய பிரதம நீதியரசர் நேற்று பதவியேற்றார்

(கொழும்பு)

நாட்டின் 44 ஆவது பிரதம நீதியரசராக கனகசபாபதி ஸ்ரீப வன் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. ஸ்ரீபவன் சிரேஷ்ட சட்டத்தரணி யாகவும் உயர்நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசராகவும், மேன்முறையீ ட்டு நீதிமன்ற தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத் தில் சிரேஷ்ட ஆலோசகராகவும் பிரதி சட்டமா அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில், நாட்டில் மிக உயர் ந்த பதவிகளில் ஒன்றான பிரதம நீதியரசர் பதவிக்கு இப்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

## வாகனங்களின் விலையில் சரிவு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்ட புதிய அரசின் இடைக் கால வரவு-செலவுத் திட்டத்தை தொடர்ந்து வாகன விலைகளில் சரிவு ஏற்பட்டுள்ளது.

1000 சிசி (கன சென்டிமீட்டர்) திறனுக்கு குறைவான வாகனங் களுக்கான இறக்குமதி வரி 15 வீதத்தினால் குறைக்கப்படுவதாக அரசு அறிவித்ததுடன் ஹைபிரிட் வாகனங்களுக்கான வரிகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதன்படி 1000 திறனுக்கு குறைவான வாகனங்களின் விலைகள் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவால் குறைக்கப்ப டுவதாகவும் இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரி வித்தது.

மேலும் ஹைபிரிட் வாகனங் களுக்கான விலை 8 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை அதிக ரிப்பதாகவும் அச் சங்கம் மேலும் தெரிவிக்கின்றது.

இதேவேளை, ஹைபிரிட் வாகனங்களுக்கான வரி அதி கரிப்பு தொடர்பில் நிதியமைச் சருடன் கலந்துரையாடவுள்ள தாகவும் அச்சங்கம் தெரிவித் துள்ளது.

# காணி அதிகாரம் வழங்கலாம் மாகாண பொலிஸ் சாத்தியமில்லை

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்களைப் பகிர்ந்தளிப் பதில் புதிய அரசுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற விவாதத் தில் அவர் பேசும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ அதிகாரத்தை வழங்குவதில் மாத்திரமே சிக்கல் இருப்பதாக வெளியுறவு பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா மேலும் தெரி வித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்கப் போவ தாக பிரதமர் ரணில்விக்ர மசிங்க உறுதியளித்துள்ளார்.

அதன்படி அது இடம்பெறும் இந்த விடயத்தில் காணி அதி காரம் வழங்குவதில் அரசுக்கு சிக்கல் எதுவும் இல்லை.

ஆனால் பொலிஸ் அதிகா ரத்தை வழங்குவதில் மாத்திரமே சிக்கல் இருக்கிறது என்று அவர் கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில, 13 ஆம் திரு த்தச் சட்டத்தை அமுலாக்கினால் நாடு பிளவடையும் என்று கூறி னார்.

இதனை மறுத்த பிரதி அமை ச்சர் அஜித் பீ பெரேரா, அதிகா ரங்களை பகிர்ந்தளிப்பதால் நாடு பிளவடையாது.

இலங்கை என்பது சிங்கள

(19)ஆம் பக்கம் பார்க்க...

## பிரித்தானிய அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

பிரிட்டனின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாயத்துக்கான இரா ஜாங்க அமைச்சர் ஹ்யூகோ ஸ்வைர் நேற்று ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவைச் சந்தித்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் உடனிருந்தார்.



### புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு தேர்தல்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு, கரைதுறைப் பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட் டுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி இரு சபை களுக்குமான தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பி ரிய அறிவித்துள்ளார்.

## பொருளாதார இலக்குகள் வரவு-செலவுத்திட்டத்தில் இல்லை

### ஜே.வி.பி. கண்டனம்

புதிய அரசாங்கத்தின் இடைக் கால வரவு-செலவுத்திட்டத்தில் பொருளாதார கொள்கைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை என ஜே.வி.பி.யின் தலைவர், அநுரகுமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க நாடாளுமன்றில் இடைக் கால வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

தேர்தல் நெருங்கிய போது கடந்த அரசாங்கமும் விலைக் குறைப்புக்களைச் செய்ததாக வும், மக்கள் அதனைப் புரிந்து கொண்டு அரசாங்கத்தை தோற் கடித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தினால் வழங் கப்பட்டுள்ள சலுகைகள் மக்க ளின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் என்ற போதிலும், தெளிவான பொருளாதாரக் கொள்கைகள் தந்திரோபாயங் கள் வரவு-செலவுத் திட்டத்தில் தென்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இந்த வரவு -செலவுத் திட்டம் முன்வைக் கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்து ள்ளார்.

(19)ஆம் பக்கம் பார்க்க...

## ஊடக சுதந்திரம் அதிகரிக்க வாய்ப்பு

### பிரித்தானிய அமைச்சர் நம்பிக்கை

புதிய அரசாங்கத்தின் கீழ் பத்திரிகை சுதந்திரம் அதிகரிக் கும் என்று தான் நம்புவதாக ஐக்கிய இராச்சியத்தின் வெளி நாட்டு மற்றும் பொதுநலவாயத் துக்கான இராஜாங்க அமைச்சர் ஹியூ ஸ்வைர் தெரிவித்துள்ளார்.

அவர், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பியதன் பின்னரே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முதற்தடவையாக யாழ்ப்பா ணம் சென்ற இவர், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனைச் சந்தித்துப்பேச்சுவார் த்தை நடத்தினார்.

யாழ்ப்பாணத்தில் அவர் பிரிட் டிஷ் கவுன்ஸில், ஐக்கிய இராச் சியம் நிதியுதவி வழங்கும் ஹலோ நம்பிக்கை நிதியத்தின் கண்ணி வெடியகற்றல் நடவடிக்கைகள், ஆனையிறவு, சபாபதிப்பிள்ளை

(19)ஆம் பக்கம் பார்க்க...

# நீண்ட இழுபறிக்குப் பின்னர் நிறைவேறியது பட்ஜெட்

## கரைச்சி பிரதேச சபையில்

நீண்ட இழுபறிக்கு பின்னர் கரைச்சி பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது. கடந்த நவம்பர் மாதம் நிறைவேற்ற வேண்டிய சபையின் வரவு செலவுத்திட்டம் சபையின் செயற்திறனற்ற நிர்வாக நடவடிக்கை காரணமாக இதுவரை நிறைவேற்றப்படாமல் இழுபறிபட்ட நிலையில் நேற்றும் ஆளும் எதிரணி உறுப்பினர்களால் சுட்டிக்காட்டபட்பட்ட பல குறைபாடுகளை எதிர்வரும் நாட்களில் சீர்செய்வதாக தவிசாளர் உறுதியளித்த நிலையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட பிரதேச சபை கடந்த வருடம் நிறைவேற்ற வேண்டிய வரவு செலவுத் திட்டத்தினை நேற்று நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் 6 தடவைகள் குறித்த வரவு செலவுத் திட்டம் சபையில் முன்வைக்கப்பட்டு, திருத்தம் மேற்கொள்ள வேண்டி நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், நேற்று மீண்டும் சபையில் வாசிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 11 மணியளவில் வரவு செலவுத் திட்டத்தினை தவிசாளர் நா.வை குகராஜா வாசித்தார். வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஆளும், எதிரணி உறுப்பினர்கள் விவாதித்ததுடன், நீண்டகாலமாக வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமையால் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்ல முடியாதுள்ளைமையை சுட்டிக்காட்டினர்.

குறித்த வரவு செலவுத்திட்டத்தில் பல்வேறு குறைகள் காணப்படும் நிலையிலும், மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு நிறைவு செய்வதற்கு ஆளும், எதிரணி உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்தினை ஆதரித்தனர்.


எதிர்வரும் அமர்வில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை மீள் திருத்தம் செய்து சபையில் முன்வைக்க வேண்டும் என சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தவிசாளரும் அதனை ஏற்றுக்கொண்டார். வாதப் பிரதிவாதங்களை அடுத்து வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (29)

# வீதியோட்டப் போட்டி

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வனமைப் போட்டியின் முதல் அங்கமான வீதியோட்டப் போட்டி இன்று காலை இடம் பெறவுள்ளது.

ஆண்களுக்கான மரதனோட்டப் போட்டிகள் காலை 6 மணிக்கு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் முன்றலில் ஆரம்பமாகி மீண்டும் கல்லூரியில் முடிவடைவதுடன், பெண்களுக்கான மரதனோட்டம் மல்லாகம் சந்தியில் ஆரம்பித்து தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் முடிவடையவுள்ளது.

போட்டிகளை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் அதிபர் ம.மணிசேகரன் ஆரம்பித்து வைப்பார் என கல்லூரியின் விளையாட்டுத்துறை முதல்வர் அறிவித்துள்ளார்.



புலம்பெயர் எழுத்தாளர் நடேசனின் "மலேசியன் ஏர்லைன் 370" என்ற சிறுகதை தொகுதியின் அறிமுக நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. அறிமுக உரையை கிளிநொச்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சிறிகுமரன் நிழ்த்துவதனையும் முதல் பிரதியை பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் வழங்க பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் பெற்றுக்கொள்வதனையும் காணலாம். (29)

# தைத்திங்கள் பொற்தூறல்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் கலைப் பணியில் 50 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வழங்கும் தைத் திங்கள் பொற்தூறல் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் இசைக்கச்சேரி, நடனங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் விபத்து; மாணவன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்பாக ஏ-9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இரண்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் ஒருவர் உயிரிழந்தார். வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து ஏ-9 பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்துடன் மோதிப் படுகாயமடைந்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் தோணிக்கல்லைச் சேர்ந்த எஸ்.துலக்சன் என்ற மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கிருசாந்தன் என்ற மற்ற மாணவன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார். பாடசாலைக்கு முன்னாலுள்ள பாதசாரிகள் கடவைக்கு அண்மித்து இடம் பெற்ற இந்த விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# மின்கட்டணத்தை செலுத்த ஒலிபெருக்கியில் அறிவிப்பு

இதுவரையில் மின்கட்டண நிலுவை செலுத்தாமல் இருப்பவர்கள் தங்களுடைய மின்கட்டண நிலுவையை இன்று சனிக்கிழமைக்கு முன்னர் செலுத்துமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச பொறியியலாளர் ச.ஞானகணேசன் நேற்றுக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மின்கட்டண நிலுவை செலுத்தாமல் பலர் உள்ளனர். அவர்கள் தங்களுக்குரிய மின் கட்டணத்தை விரைந்து செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாதவர்களின் மின் இணைப்புக்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் துண்டிக்கப்படும்.

இனிவருங்காலங்களில் மின் பட்டியலில் குறிப்பிட்டபடி மாதாந்தம் மின்கட்டணத்தைச் செலுத்தி சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் கூறினார்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYL |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | IT.COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1131

திகதி 29.01.2015

வெற்றி எண்கள்: 17 38 53 65 — ஆங்கில எழுத்து: W

ஜக்பொட் பரிசு ரூ. 1,19,26,140/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,19,26,140/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 261 | 1,000/= | ரூ. 2,61,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 447 | 1,000/= | ரூ. 4,47,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11567 | 60/= | ரூ. 6,94,020/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6102 | 40/= | ரூ. 2,44,080/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151689 | 20/= | ரூ. 30,33,780/= |
| ஆங்கில எழுத்து | 21981 | 20/= | ரூ. 4,39,620/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,619,500/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 12,222,640/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.02 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3801)


## வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் புதுமைமாதா ஆலய வருடாந்த நற்கருணைத் திருவிழா நாளை மாலை 5.00 மணிக்கும் மறுநாள் பெருவிழா திருப்பலி நாளை மறுதினம் காலை 5.15 மணிக்கும் கூட்டுத் திருப்பலி காலை 6.30 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. திருச்சொரூப பவனி நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி நிறைவில் இறை மக்களுக்கு பங்குத்தந்தையால் ஆசீர் வழங்கப்படும். (27)

# பிரதேசத்தின் கலை அம்சங்கள் நூலுருப்பெறுவது சிறப்பானதாகும்

## விரிவுரையாளர் குமரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு பிரதேசத்தினதோ அல்லது இடத்தினதோ கலை பண்பாடுகளை அழியவிடாது எதிர்கால சந்ததிக்கு வழங்குவதற்கு ஏதுவாக, அத்தகைய கலை அம்சங்களை நூல் வடிவில்- ஆக்கி வெளியீடு செய்வது பாராட்டத்தக்க விடயமாகும் என யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தெரிவித்தார்.


யாழ். பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய கலாசார விழா அண்மையில் திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலாசார பேரவையின் வெளியீடான யாழ் பாடி நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிரதேச செயலகங்களில் கலாசார பேரவைகள் தமது பிரதேசத்தின் கலை அம்சங்களை வெளிக்கொண்டு வரும் வகையில் கலாசார நிகழ்வுகளை வருடாவருடம் நடாத்தி வருகின்றன. இது வரவேற்கத்தக்கதாகும்.

அத்துடன் கலைகள் சார்ந்த விடயங்கள் கலைஞர்கள் பற்றிய விடயங்களை ஏனையவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் நூல் வெளியிடப்படுவது சிறப்பானதாகும் அந்த வகையில் யாழ்பாடி நூல் வரப்பிரசாதமாகும் என்றார். (63)



யாழ். பிரதேச செயலகத்தின் கலாசாரவிழா அண்மையில் திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையரங்கில் நடைபெற்றது. இதில் கலைஞர் எம்.எம்.லாபீருக்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா யாழ். ரத்னா விருது வழங்கிக் கௌரவித்தார். (105)

## பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்ட பத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் க.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (85)

# முல்லைத்தீவு அரச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அரச செயலகத்தின் புதிய கட்டடம் எதிர் வரும் 6 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக முல்லைத் தீவு அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

உள்நாட்டலுவல்கள் மற்றும் மீன்பிடி அமைச்சர் யோசப் மைக்கல் பெரேராவினால் இப் புதிய அரச செயலகக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்ததுடன் ரூபா 220 மில்லியன் செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு நகரத்தில் கடந்த காலபோர் காரணமாக சகல கட்டுமானங்களும் அழிவடைந்தன.

1990 தொடக்கம் 1996 வரை முல்லைத்தீவு நகர மக்கள் முற்றாக இடம்பெயர்ந்திருந்தனர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையின்போது முல்லைத்தீவில் 3000 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர்.

2008 ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்றபோதும் முல்லைத்தீவு நகரம் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளது.

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் முல்லைத்தீவு நகரினை அபிவிருத்தி செய்யும் வகையில் முல்லைத்தீவு அரச செயலகத்திற்கான புதிய செயலகக் கட்டடம் அமைக்கப்பட்டு முடிக்கப்பட்ட நிலையில் இக்கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. (160)

# தமிழ் எழுத்துப் பிழைகளுடன் அறிவித்தல் பதாகைகள்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் நகரத்தின் பல இடங்களில் தமிழ எழுத்துப் பிழைகளுடன் விளம்பரப் பதாகைகள் காணப்படுவதாக புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர். கடந்த ஓராண்டுகளுக்கு மேலாக இவ்விளம்பரப் பதாகைகள காணப்படுகின்றன. தமிழ் எழுத்துப்பிழைகள் இளைய தலைமுறையினரிடையே பிழையான எண்ணக்கருவினை தோற்றுவித்துவிடும்.

குறிப்பாக மாணவர்கள் மத்தியில் பிழையான தமிழ்ச் சொற்கள் சரியான சொற்களாகவே கருதி பாடசாலைகளில் பயன்படுத்துவதன் காரணமாக மாணவர்களின் எழுத்துப் பிழைகள் அதிகரிக்கின்றன.

மாணவர்கள் மத்தியில் எழுத்துப்பிழைகள் அதிகரிப்பதற்கு பொதுவானவிடங்களில் தவறான எழுத்துப்பிழைகளுடன் வைக்கப்படும் விளம்பரப் பதாகைகள் முக்கிய காரணமாக அமைகின்றன.

முக்கிய நகரங்களில் வைக்கப்படும் விளம்பரப் பதாகைகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை யெடுக்க வேண்டுமெனவும் தமிழ்மொழி புத்திஜீவிகள் கருத்துத்தெரிவிக்கின்றனர்.(160)

# துஷ்பிரயோகம் செய்த இளைஞன் நடவடிக்கை இல்லையென விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞன் மீது இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப் பகுதி மக்கள் தமது விசனத்தை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இப்பகுதியில் 8 வயதுச் சிறுமியை 23 வயது இளைஞன் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

எனினும் முறைப்பாடு செய்து 8 நாட்கள் கடந்துள்ள நிலையில் விசாரணைகளே இடம்பெற்று வருவதாகவும் இளைஞன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்வும் தெரிவிக்கின்றனர். (67)

## மகா கும்பாபிஷேகம்


(யாழ்ப்பாணம்)

கீரிமலை திருவருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.20 மணிமுதல் 10.41 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது,

இதில் இன்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரை அடியார்களின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

இதில் கும்பாபிஷேக பிரதம குருவாக சிவஸ்ரீ நகுல நவராஜ உமாபதிஸ்வரக் குருக்கள் கிரியைகளை ஆற்றவுள்ளார்.

# முதியோர் இல்லத்துக்கு உபகரணங்கள் வழங்கல்



வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தால் 9 முதியோர் சங்கங்களுக்கும் கைதடி அரச முதியோர் இல்லத்திற்கும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கைதடியில் நடைபெற்றது.

சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சுகாதார சமூகசேவைகள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டார். (90)



**வடக்கின் வசந்தம் 2014 விசேட நிதியிலிருந்து பெண்களை தலைமைத்துவமாக கொண்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு சுயதொழில் கடனுதவியை நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் அண்மையில் வழங்கி வைத்தார்.**

# அன்னதான மண்டபத் திறப்பு விழா

பென்னாலைச் சந்தியில் மிக நீண்ட காலமாக பொதுமக்களது பங்களிப்புடன் தலைவர் ஆனந்தசித்திரசேனனால் முன்னெடுக்கப்பட்ட பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையம் பொன்னாலை நாராயணன் அன்னதான மண்டபம் மற்றும் பொன்னாலை சனசமூக நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், கௌரவ விருந்தின்ராக நல்லைக் குருமணிகளும் கலந்து சிறப்பித்துக் கொண்டனர். நிகழ்வில் பொன்னாலை தாகசாந்தி நிலையத்தினை நல்லைக் குருமணிகள் திறந்து வைத்தார்

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலர் அ.சோதிநாதனால் பொன்னாலை நாராயணன் அன்னதான மண்டபம் திறந்து வைக்கப்பட்டது இதனைத் தொடர்நது மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனால் பொன்னாலை நாராயணண் சனசமூக நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் உரையாற்றினார். (63)

பட்டங்கள் மனிதர்களுக்குப் பெருமை சேர்ப்பதில்லை மனிதர்கள் தான் பட்டங்களுக்குப் பெருமை அளிக்கிறார்கள். -மாக்கியவெல்லி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கருத்துச் சுதந்திரமும் மறுப்பும்

தமிழ்நாட்டு எழுத்தாளர் பெருமாள் முருகன் 2010-ல் எழுதிய மாதொருபாகன் என்ற நாவலுக்கான எதிர்ப்பும் எரிப்பும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் திடீரென சமீபத்தில்தான் கிளம்பியதும், பின்னர் எழுத்தாளர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதுடன் ஒருவாறு ஓய்ந்திருப்பதும் பலர் அறிந்ததே.

பெருமாள் முருகன் தனது நாவலில் திருச்செங்கோடு மக்களை இழிவுபடுத்தி விட்டார் என்று பிரதானமாக இந்து அமைப்புக்கள் காட்டிய எதிர்ப்புக்கும் அதை எதிர்த்து கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தியவர்களுக்கும் இடையே பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று ஓய்ந்ததும் பலருக்கும் தெரிந்ததே.

புத்தகங்களை திரைப்படங்களை கருத்துக்களை தடைசெய்யக் கோரும் மனிதர்களும் காலம் காலமாக இருந்துவருகிறார்கள். அவர்களைக் கண்டித்து கருத்துரிமையை வலியுறுத்தும் மனிதர்களும் தொடர்ந்து போராடியே வருகிறார்கள்.

மாதொருபாகனை முன்னிட்டு கருத்துரிமைப் போராட்டம் பெரியளவில் நடந்தபோது, வேறு சில கருத்துக்கள் புத்தகங்கள் கலைஞர்கள் தடை செய்யப்படும்போது சமூகம் கண்டுகொள்ளாதிருப்பது அல்லது இதுபோன்ற கவனத்தைப் பெறாமல் விடுவது பற்றியும் பலர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் ஒருவர் தனது கருத்தை வெளியிடும் சுதந்திரம் என்பது மற்றைய சுதந்திரங்கள் எல்லாவற்றையும் விட தலையாயது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் கருத்து என்பது அவரது மொழியே ஆகும். அதனால்தான் ஒரு தேசத்தை அழிக்க விரும்பினால் முதலில் அவர்களது மொழியை அழித்து விடுங்கள் என்கிறார்கள்.

பேச்சு ஒருவரது பிறப்புரிமை என்றால் கருத்தும் அவரது பிறப்புரிமையே. அந்த சுதந்திரத்தை எவருக்கும் ஒரு நபரோ, ஒரு நிறுவனமோ, ஒரு நாடோ கொடுப்பதில்லை. பிறப்பின் வழியாக ஒவ்வொரு மனிதனும் பெற்றிருப்பது. அதனை யாரும் பறிமுதல் செய்ய முடியாது.

கருத்துச் சுதந்திரத்திற்கான போராட்டம் என்பது இதனையே வலியுறுத்துகிறது. ஆனால், உலகம் முழுவதும் பேசப்பட்ட பேச்சுக்கும், எழுதப்பட்ட புத்தகங்களுக்கும் எதிராக போராட்டங்கள் நடைபெற்றே வருகின்றன.

இந்த எதிர்ப்பென்பது பெரியோர் புத்தகங்களாக இருந்தலென்ன, சிறியோர் கதைகளாக இருந்தாலென்ன, சீர்திருத்தக் கருத்துக்களாக இருந்தாலென்ன, மானுட அறிவில் ஒளிபாய்ச்சிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பாக இருந்தாலென்ன, பிற்காலத்தில் பேருண்மையாக விளங்கிக் கொள்ளப்பட்ட தீர்க்கதரிசனங்களாக இருந்தாலென்ன.... எல்லாவற்றின் மீதும் பாய்ந்திருக்கிறது.

கார்ல் மார்க்ஸ் – எங்கெல்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கையும் பல ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டு எரிக்கப்பட்டது. சிறுவர்களுக்கான புத்தகமான "ஆலீஸ் அதிசய உலகம்' தடை செய்யப்பட்டது. பதினான்கு வயதுச் சிறுமி அன்னி பிராங் எழுதிய டைரியும் ஆபாச புத்தகம் என்று கொளுத்தப்பட்டது.

உலகம் முழுவதிலும் தடை செய்யப்பட்ட, எரிக்கப்பட்ட புத்தகங்களின் பெயர்கள் அடங்கிய நீண்ட பட்டியல் ஒன்று இருக்கிறது. அந்தப் பட்டியலில் மகத்தான பல புத்தகங்களும், உலக வரலாற்றையே அடியோடு மாற்றியமைத்த புத்தகங்களும் இருக்கின்றன.

அசலான, முன்னேற்றமான கருத்தொன்று சொல்லப்படும் போது, மரபுவாதிகள், பழைமையின் மீது ஈடுபாடு கொண்டோர் அதனை ஏற்று அங்கீகரிப்பதில்லை. அப்படி ஏற்பது, தங்களின் அதிகாரத்தைப் பறித்துவிடும் என்றும், செல்வாக்கைக் குறைத்து விடும் என்றும் பயப்ப்டுகிறார்கள்.

சமூக நலன் பற்றிச் சிந்தனை செய்கிறவர்கள், பழைமைவாதிகளுக்கு மட்டுமல்ல, பெரும்பான்மையான மக்களுக்கும் உவப்பாக இல்லாத போதும் அந்தக் கருத்தை அவர்கள் சொல்வதற்கு இடமளிப்பதுதான் கருத்துச் சுதந்திரம்.

- ஆசிரியர்

# கிழக்கு முதலமைச்சர் யார்?

## தீர்மானிக்கும் அதிகாரம் ஹக்கீமிடம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சரை தீர்மானிக்கும் அதிகாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் வழங்கப்பட்டுள்ளது என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிழக்கு மாகாண் சபையின் ஆட்சியை தொடர்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் அனுமதி வழங்கியுள்ளனர்.

குறித்த ஒப்பந்தத்திற்கமைய முதலமைச்சர் பதவியினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு குறித்த இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம் பெற்றது.

சுமார் 30 நிமிடங்கள் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர். இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு முதலமைச்சர் பதவியினை வழ்ங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இதனால் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஒருவரின் பெயரினை முதலமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்யுமாறு கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சந்தித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முதலமைச்சர் பதவியினை யாருக்கு வழங்குவது தொடர்பான இறுதி முடிவினை மேற்கொள்ளும் அதிகாரத்தினை தலைவருக்கு வழங்குவது என தெரிவித்தனர்.

இதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் அமைச்சர் ஹக்கீம் தனித் தனியாக சந்தித்து முதலமைச்சர் பதவி தொடர்பில் கருத்துக்களை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் பாரிசவாத நோயாளிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாரிசவாத நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்திய கலாநிதி கே.அஜந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாதம் மாத்திரம் 30 நோயாளிகள் பாரிசவாத நோயால் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

அதிகமான நோயாளிகள், நோயின் தாக்கம் அதிகரித்த நிலையிலேயே வைத்தியசாலைக்கு வருகின்றனர். நோய்த் தாக்கம் அதிகரித்த நிலையில் வருவதால் நோயை முற்றாக குணப்படுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது.

பாரிசவாத நோய்க்குரிய அறிகுறிகள் தென்படும் போதே வைத்தியரை நாடுவதன் மூலம் விரைவில் சிகிச்சையை பெற்றுக்கொள்வதோடு பூரண குணமடையும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

## பாடசாலை தேவைகளுக்காக பணம் அறவிடுவதற்கு தடை

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள் நிதி சேகரிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைமை தொடர்பில் சுற்றறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பாடசாலைகளில் மாணவர்களை புதிதாக சேர்க்கும் போதும். அதன் பின்னரும் பல்வேறு வழிகளில் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இந்த முறைமை ஏற்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பாடசாலைகளின் தேவைக்காக பணம் அறவிடுவதனை உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வசதிக்கட்டணத்தை செலுத்தாத மாணவர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் மற்றும் உளரீதியில் பாதிப்புக்குள்ளாக்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என அதிபர்களுக்கு வேண்டுகோள விடுக்கப்பட்டுள்ளது. வசதிக் கட்டணத்தை செலுத்தாத மாணவர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் மற்றும் உளரீதியில் பாதிப்புக்குள்ளாக்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு மேலாக நிதி சேகரிக்கப்படும் போது, அது தொடர்பில் கல்வி அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இலங்கையில் பிறந்த சகலருக்கும் இரட்டை பிரஜாவுரிமை வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் பிறந்த சகலருக்கும் இரட்டை பிரஜாவுரிமை பெறமுடியுமென நிதிய மைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முறையான ஒரு மதிப்பீட்டை தொடர்ந்து 5 இலட்சம் ரூபாய் செலுத்தி இரட்டை பிரஜாவுரிமையை பெறமுடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் 10 மில்லியன் டொலர் முதலீடு செய்யக்கூடிய, இலங்கையில் வதிவிட அந்தஸ்தை பெறவிரும்புவோருக்கும் அதற்கான வழிவகைகள் செய்யப்படும். இரட்டை பிரஜாவுரிமையை பெறுவதற்காக விண்ணப்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தை பெற வேண்டும்.

இவர்களுக்கான விசாக் கட்டணம் 2.5 மில்லியன் ரூபாவாகும். இதனை 5 வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

## மூடப்பட்டுள்ள அரிசி ஆலைகளை மீளவும் திறப்பதற்கு நடவடிக்கை

நாட்டிலுள்ள அரிசி ஆலைகளில் 90 வீதமானவை மூடப்பட்டிருப்பதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா குறிப்பிடுகின்றார்.

ஆலை உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

பாரிய, நடுத்தர மற்றும் சிறியளவிலான என அனைத்து வகையான் அரிசி ஆலைகளும் பெருமளவில் மூடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அரிசி ஆலைகள் குறித்து அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தாமையே இந்த நிலை ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆலை உரிமையாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து உடனடி தீர்வு வழங்கக்கூடிய வழிவகைகளை ஆராய்வதற்காக அதிகாரி ஒருவரை நியமித்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**எழுகதிரோன் கட்டுரையிலிருந்து**

# மாகாண சபை முறைமையை வலுப்படுத்த முடியாத தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரசன்னம்

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்த முயற்சிகளில் 13ஆவது சட்டத்திருத்தமும் அதனூடான மாகாண சபை முறைமையும் முக்கியமானவையாகும்.1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த மாகாண சபை முறைமை முளையிலேயே கருகிப் போக புலிகள் வழிவகுத்தனர்.

அதன் பின்னர் புலிகள் தாங்கள் கட்டியமைத்த இராணுவ பலத்தின் காரணமாக மாகாண சபை முறைமையை விட தமிழீழத்தை அல்லது அதற்கு சமனான ஏதாவதொன்றை பெற்றுத்தருவோம் என்று தமிழ் மக்களை நம்பச்செய்தார்கள்.

2009 ஆண்டு மே மாதம் நடந்து முடிந்த புலிகளின் அழிவு வரை தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் அந்த நம்பிக்கையையே கொண்டிருந்தார்கள். அதனால்தான் சந்திரிகா முன்வைத்த தீர்வு பொதியைக்கூட ரணில் பாராளுமன்றில் வைத்து தீ மூட்டும் போது கைகட்டி வாய் மூடியிருக்க இந்த கூட்டமைப்பினரால் முடிந்திருக்கிறது.

அதேபோன்றுதான் 2007 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையூடாக மீண்டும் மாகாண சபைகளை உருவாக்கும் முயறசியை அன்றைய மகிந்த அரசாங்கம் முன்னெடுத்தபோது அதையிட்டு கூட்டமைப்பினர் அக்கறை கொள்ளவில்லை. எப்போதும் போல புலிகள் இராஜதந்திர பின்வாங்கலை செய்திருப்பதாக அவர்கள் நம்பினர்.

கிழக்கை மீட்டெடுத்த இலங்கை இராணுவத்தின் வெற்றியை தற்காலிகமானதாகவே கூட்டமைப்பினர் நம்பினர். மீண்டும் புலிகள் கிழ்க்கை வெற்றி கொள்ளும்போது தாம் புலிகளின் பழிவாங்கும் இலக்குக்கு உட்படலாம் என்று அவர்கள் அஞ்சினர்.



இதனால் 17 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் மாகாண சபைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட அரசுடன் இணைந்து செயற்பட கூட்டமைப்பினர் மறுத்தனர். கிழக்கு மாகாண சபை தேறாது, உருப்படாது என்றும் கூட சாபமிட்டனர். இதனால் அப்போதுதான் உருவாகிய தமிழ் மக்கள் விடுதலை புலிகள் தனித்து நின்று அந்த சவாலை எதிர் கொள்ள நேர்ந்தது.

எவ்வித முன்னனுபவமும் அற்ற நிலையில் எந்தவித ஆதரவும் இல்லாது போன போதும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் தலைமையில் கிழக்கு மாகாண சபை என்னும் இயந்திரம் மெல்ல மெல்ல இயங்க தொடங்கியது. அப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்கள் விடுதலை புலிகள் 17 வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்ட மாகாண சபை முறைமைக்கு உயிரூட்டினர்.

அப்போதும் முதலமைச்சர் தமிழரா? முஸ்லிமா? என்கின்ற குரல்கள் ஆரம்பத்தில் எழுந்திருந்தாலும் காலப்போக்கில் தமிழ் -முஸ்லிம் நல்லுறவை பேணுவதில் முன்னுதாரணமாக கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் திகழ்ந்தது.

முதலமைச்சரோடு மற்றொரு அமைச்சர் தமிழராகவும் ஏனைய இரு அமைச்சுகளும் முஸ்லிம்களுக்கானதாகவும் ஐந்தாவது அமைச்சராக சிங்களவர் ஒருவரும் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஆட்சி செய்தனர். அமைச்சரவைத்தீர்மானங்கள் அனைத்திலும் கிழக்கின் இன விகிதாசாரத்தின் அடிப்படையை பேணவேண்டும் என்னும் 'நடைமுறை ஒப்பந்தம்' காலப் போக்கில் உருவானது.

ஆட்சியில் முக்கிய பங்கெடுத்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரசும் இனவாத அணுகு முறையை விட இனங்களின் ஒற்றுமையுடனான கிழக்கின் தனித்துவம் பற்றிய கொள்கை கொண்டிருந்தமை இந்த வெற்றிக்கு காரணமாயிற்று.

ஆனால் கிழக்கு மாகாண சபை தேர்தல் 2012இல் இடம்பெற்ற போது புலிகள் முற்றாக அழிந்திருந்தார்கள். புலிகளின் அழிவு தமிழ் தேசிய கூட்டமைப்பின் அணுகு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

கிழக்கு மாகாண சபையின் உருவாக்கத்தையே ஏற்றுக்கொள்ளாத தமிழ் தேசிய கூட்டமைப்பினர் 2012இல் இடம் பெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் பங்கெடுத்தார்கள். இங்கே கொள்கையை விட அவர்களது கட்சி சார் நலனும் அதற்கான அரசியல் பழிவாங்கும் உணர்வுமே மேலோங்கியிருந்தது.

அதேபோன்றுதான் வடமாகாணசபை தேர்தல் நடந்த போதும் அதில் பங்கெடுத்து அதனூடாக அதிகார பரவலாக்கத்தை வலுப்படுத்தும் எண்ணமோ மக்களுக்கு முடிந்த வரை சேவையாற்றும் எண்ணமோ தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடம் காணப்படவில்லை.

மாறாக கிழக்கில் சந்திரகாந்தனைப் போல வடக்கில் டக்ளஸ் தலைமையில் ஆட்சி அமைவது தமது அரசியல் எதிர்காலத்துக்கு நல்லதல்ல என கூட்டமைப்பினர் அஞ்சினர். தமது பகிஷ்கரிப்பு அதற்கு வாய்ப்பாகிவிடக் கூடும் என்கின்ற அச்சமே அவர்களின் பிரசன்னத்துக்கு அடிப்படை காரணமாயிற்று.

ஆனால் மக்களுக்கு இந்த அரசியல் நகர்வுகள் பற்றிய தெளிவில்லை. எனவே தான் வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுவோம் என்கின்ற மாகாண சபை அதிகாரங்களுக்கு சம்பந்தமற்ற கூச்சல்களில் மயங்கி அவர்களுக்கு வாக்களித்தனர்.

தமது தனிப்பட்ட பதவிகள், நலன்கள் சார்ந்த நகர்வாக கூட்டமைப்பினரின் பங்கெடுப்பு இருந்தமையால்தான் வடக்கில் பெருவெற்றியீட்டிய போதிலும் கூட்டமைப்பினரின் பதவி சண்டைகளும் குழி பறிப்புகளும் இது வரையான எந்தவொரு மாகாண சபைகளிலும் இடம்பெறாத அளவிற்கு சாதனை படைத்தன. வட மாகாண சபையும் இன்றுவரை சேடமிழுத்து கொண்டிருக்கின்றது.

2012-ல் கிழக்கு மாகாண சபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனித்து ஆட்சியமைப்பதாக சொல்லி பங்கெடுத்தது. இதனூடாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்கள் விடுதலை புலிகள் நடத்திய ஆட்சி தோல்விகண்டது.

**தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்தமை காரணமாக கிழக்கு மாகாண சபையில் ஒரு தமிழரேனும் இல்லாத அமைச்சரவை உருவானது. இது தமிழர் வரலாற்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கிழக்கு மாகாண மக்களுக்கு செய்த பெரும் துரோகமாகும்.**

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன. முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்க்ளைப் பெற்றுக் கொண்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் 11 உறுப்பினர்களை வென்றெடுத்த போதிலும் ஆட்சியமைக்க முடிய வில்லை. மீண்டும் அன்றிலிருந்து கிழக்கு மாகாணசபையின் சீரான இயக்கம் பாதிப்புக்குள்ளானது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பே ஆட்சியமைத்தது. தமிழ் மக்களின் பெருவாரி வாக்குகள் தமிழ் மக்கள் விடுதலை புலிகளை விடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பை நோக்கி சென்றமை காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சி அமைத்தது. இதன் காரணமாக முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் தெரிவானார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த தேர்தலில் பங்கெடுத்து தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்தமை காரணமாக எதிர்க்கட்சி வரிசையில் 11 உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டனர். ஒரு தமிழரேனும் இல்லாத அமைச்சரவை உருவானது. இது தமிழர் வரலாற்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கிழக்கு மாகாண மக்களுக்கு செய்த பெரும் துரோகமாகும்.

முதலமைச்சர் தமிழரா? முஸ்லிமா? என்பதல்ல. இயங்காத ஒரு முதலமைச்சரே கடந்த 2 வருடங்களுக்கு மேலாக கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்கின்றார்.

**எப்படியோ மாகாண சபைகளின் செயற்பாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரசன்னம் இருந்தவற்றையும் இல்லாதொழிக்கவே பயன்பட்டிருக்கின்றது என்பதை காலம் உறுதிப்படுத்தியுள்ளது.**

இப்போது மத்தியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மீண்டும் கிழக்கின் ஆட்சிக்கு ஒரு தடங்கலை உருவாக்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தனது பெரும்பான்மையை இழந்திருப்பதால் ஆட்சி தோல்வி கண்டுள்ளது. அதனால் மீதமுள்ள காலத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஆட்சியமைக்க முனைப்பு கொண்டுள்ளார்கள்.



ஆனால் அவர்களுக்கும் பெரும்பான்மை இல்லை. முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சியமைக்கும் முயற்சி முதலமைச்சர்பதவியை யாருக்கு வழங்குவது என்னும் இழுபாட்டில் தோல்வி கண்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற இரண்டுமே இனவாத கட்சிகள் என்பதால் கிழக்கில் இந்தப் போட்டி மீண்டும் ஒரு இன முறுகல் நிலையை தோற்றுவிக்கத் தொடங்கியுள்ளது. இது ஆரோக்கியமான போக்கல்ல.

தற்போதைய கிழக்கு மாகாண சபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமையில் ஆட்சி அமைப்பதற்கும் அக்கட்சி சார்பான ஒருவர் முதலமைச்சராவதற்கும் தமது கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்க தயாராக உள்ளது என தமிழ் கூட்டமைப்பின் எதிராளி கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களிடம் இருப்பது இரு உறுப்பினர்கள் மட்டுமே.

இதன் காரணமாக கிழக்கு மாகாண சபையின் இயக்கம் முற்றாக தடையாகியுள்ளது. சிலவேளைகளில் கிழக்கு மாகாண சபை கலைக்கப்படலாம். விரைவில் பாராளுமன்ற பொதுத் தேர்தல் ஒன்று வரும் வாய்ப்புள்ளமையால் அதற்கு முன்னர் மாகாணசபையை கலைக்க அரசாங்கம் விரும்பாது.

எப்படியோ மாகாண சபைகளின் செயல்பாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரசன்னம் இருந்தவற்றையும் இல்லாதொழிக்கவே பயன்பட்டிருக்கின்றது என்பதை காலம் உறுதிப்படுத்தியுள்ளது.

# ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான மேலும் 65 வாகனங்களைத் தேடி வேட்டை

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு



ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான மேலும் 65 வாகனங்களைத் தேடி குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன்பொருட்டு விசேட பொலிஸ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 749 வாகனங்கள் காணாமற் போயிருந்ததாக பதிவாகியுள்ளது.

அவற்றுள் 80இற்கும் அதிகமான வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளதாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து கடந்த நாட்களில் மீட்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பொலிஸாரால் மீட்கப்படுமாயின். அதுதொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும் வரை சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்படமாட்டாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# ச.தொ.ச. களஞ்சியசாலைகளிலுள்ள அரிசியில் வண்டுகள் கண்டுபிடிப்பு

லங்கா சதொசவின் களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு தொகை அரிசியில் வண்டுகள் காணப்படுவதாக உணவுப் பாதுகாப்பு தொடர்பான அமைச்சு தெரிவித்துள்ளது.

50,000 மெற்றிக்தொன்னிற்கும் அதிகளவிலான அரிசியில் இவ்வாறு வண்டுகள் காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

லங்கா சதொசவின் களஞ்சியசாலைகளிலுள்ள அரிசியை நுகர்வுக்கு பயன்படுத்த முடியுமா? என்பது தொடர்பான அறிக்கை ஒரு வாரத்திற்குள் தமக்குக்கிடைக்கவுள்ளதாக அமைச்சர் காமினி ஜயவிக்ரம தெரிவித்தார்.

அமைச்சரவையின் அனுமதியுடன் 45 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பங்களாதேஷ் மற்றும் இந்தியாவில் இருந்து கடந்த வருடம் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 45 தொடக்கம் 60 மெற்றிக்தொன் அரிசி விநியோகிக்கப்படாத நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாகவும் இந்த அரிசியை நுகர்வுக்கு பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் ஆராய்ந்து சுகாதார திணைக்களம் அறிக்கை சமர்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியா மற்றும் பங்களாதேஷில் இருந்து மேலும் ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளதால் அந்த இறக்குமதியை நிறுத்த முடியாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### - பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் -

# 16,700 பட்டதாரி ஊழியர்கள் வேறு அமைச்சுக்களுக்கு மாற்றம்

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் அமைச்சான பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் 16,700 பட்டதாரிகள் நிரந்தரமாக்கப்பட்டு மாதாந்தம் அரச சம்பளம் ருபா 28,000 பெருகின்றனர்.

அவர்கள் நாளாந்தம் அலுவலகத்திற்கு வந்து கையெழுத்திட்டு விட்டு மீண்டும் 04.30 மணிக்கு கையெழுத்திட்டு வீடு செல்லும்வரை அலுவலகங்களில் கதைப்புத்தகங்கள் நாவல்கள் வாசிக்கின்றனர். இவர்கள் இந்த அமைச்சின் கீழ் செய்வதற்கு எவ்வித வேலையும் இல்லை. என திட்டமிடல் பெருளாதார அமைச்சர் கலாநிதி ஹர்சா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இப் பட்டதாரிகள் சமுர்த்தி வீடமைப்பு அமைச்சின் கீழ் தான் கொண்டு வருதல் வேண்டும் அல்லது பொதுநிருவாக அமைச்சின் ஊடாக வேறு அமைச்சுக்களுக்கு மாற்றுதல் வேண்டும். முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் அமைச்சினை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் இருந்த சில நிறுவனங்கள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டுவரப்பட்டு பிரதம மந்திரி அலுவலகத்திலே இந்த அமைச்சு இயங்குகின்றது. ஆனால் மருதானையில் உள்ள அமைச்சினை முட திட்டமிடப்பட்டுள்ளது

இந்த அமைச்சின் கீழ் இவ்வளவு பாரியதொகையில் 16,700 ஊழியர்கள் ஓர் அமைச்சுக்கு தேவைப்பாடாது. ஏற்கனவே 80 அமைச்சுக்கள் 30ஆக குறைக்கப்பட்டதனால் ஏனைய 50 அமைச்சுக்களின் ஊழியர்களும் முடங்கிக் கிடக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 1இலட்சம் ஊழியர்கள் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

# ஷிராணி பண்டார நாயக்க ஓய்வு



இலங்கையில் புதனன்று மீண்டும் பதவி அமர்த்தப்பட்ட தலைமை நீதிபதி ஷிராணி பண்டார நாயக்க நேற்று முன்தினம் பொறுப்பிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவை வரவேற்கும் வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தான் ஓய்வு பெற்ற பின்பு வெற்றிடமாகும், 44 ஆவது தலைமை நீதிபதி பதவிக்கு தற்போது உச்ச நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக செயற்படும் கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட்டால் அது தொடர்பாக தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்.

நீதித் துறையில் தான் பதினாறு வருட காலம் சேவையாற்றியுள்ளதாக கூறிய ஷிராணி பண்டார நாயக்க, அந்தக் காலப் பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட தான் முயற்சிகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

ஆயினும் அடிப்படையற்ற முறையில் சமர்ப்பிக்கப்பட்ட கண்டன தீர்மானமொன்று காரணமாக தனது சேவை காலத்தில் 746 நாட்கள் பறிக்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அந்த காலப் பகுதிக்குள் தனது குடும்பத்தினர் மற்றும் தனக்கு ஆதரவளிக்க முன்வந்தோர் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்ததாக கூறிய நீதிபதி பண்டாரநாயக்க அச்சுறுத்தல்கள் மத்தியில் தன்னை ஆதரித்த பொது மக்கள் வழக்கறிஞர்கள் மற்றும் கீழ் நீதிமன்றங்களில் செயற்படும் நீதிபதிகளின் துணிச்சலை தான் வரவேற்பதாகவும் கூறினார்.

ஆயினும் தலைமை நீதிபதியாக ஷிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட்ட முறையை தனக்கு ஏற்றுக்கொள்ள முடியாதென்று மூத்த வழக்கறிஞர் ஸ்ரீநாத் பெரேராகூறினார்.

தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க நீக்கப்பட்ட நாடாளுமன்ற தீர்மானம் முறையாக நிறைவேற்றப்படாத காரணத்தினால், அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டு மொஹான் பிரிஸ் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இந்த முறையை தனக்கு ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறிய ஸ்ரீநாத் பெரேரா, இவ்வாறு நீதிபதிகள் நியமிக்கப்பட்டால் எதிர்காலத்தில் ஆட்சி அமைக்கும் அரசாங்கங்களும் தான் விரும்பியவாறு நீதிபதிகளை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படலாமென்றும் எச்சரித்தார். ஆயினும் மொஹான் பிரிஸ் பதவி நீக்கப்பட்டாலும் கூட அவர் வழங்கிய தீர்ப்புக்கள் செல்லுபடியற்றவை என்று கருதப்படமாட்டதென்று வழக்கறிஞர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

இந்த வைபவத்தில் உச்ச நீதிமன்ற, மேன் முறையீட்டு நீதிமன்ற மற்றும் மஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டனர்.

# பிரதம நீதியரசர் ஸ்ரீபவன்

### - ஒருபார்வை



இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக கே. ஸ்ரீபவன் நியமிக்கப்பட உள்ளதாக அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஸ்ரீபவன் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசராகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட ஆலோசகராகவும் பிரதி சட்டமா அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில், இலங்கை மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றான பிரதம நீதியரசர் பதவியை அவர் தன்வசப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக நியமிக்கப்பட உள்ள கே.ஸ்ரீபவன் பற்றிய சிறு குறிப்பு.

கனகசபாபதி ஜே.ஸ்ரீபவன் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்ப கல்வியை கற்ற அவர் 1சட்ட கல்லூரியில் இணைந்து கொண்டதுடன் 1976 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியின் பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியடைந்தார்.

1978 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிக்கு சேர்ந்த ஸ்ரீபவன், பதில் சட்ட ஆலோசகராக பணியாற்றினார். 1989 ஆம் ஆண்டு சிரேஷ்ட சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

1996 ஆம் ஆண்டு பிரதி சட்டமா அதிபராக நியமனம் பெற்ற அவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் பணியாற் றியுள்ளார்.

புதிய சட்டக்கல்வியை தொடர்ந்தும் கற்று வந்த ஸ்ரீபவன், 1992 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிற் சட்டம் சம்பந்தமான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் அதே ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பில் விசேட பட்டத்தையும் பெற்றுள்ளார்.

2002 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்ட ஸ்ரீபவன் 2007 ஆம் ஆண்டு மேன முறையீட்டு நீதிமன்ற தலைவராக நியமிக்கப்பட்டார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் நிஹால் ஜயசிங்க ஓய்வு பெற்ற பின்னர் ஸ்ரீபவன் 2008 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# அந்த 100 நாட்களும் அரசுக்கு சவால் தான்

## ரணில் சொல்கிறார்



100 நாட்கள் வேலைத்திட்டத்தை நிறைவேற்றும் சவால்மிக்க நடவடிக்கையில் இரவு பகல் பாராது உழைத்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாம் செய்யும் வேலையையே பார்க்க வேண்டும். தவிர, நாட்கள் குறித்து எண்ணிக்கொண்டிருக்கக் கூடாது என்றும் பிரதமர் கூறினார்.

தனது உரைக்குப் பின்னர், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால், இடைக்கால வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று, நாடாளுமன்றத்தில் சற்றுமுன்னர் உரையாற்றிய பிரதமர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரத்தைப் போன்று, குடும்ப ஆட்சியையும் நாம் ஒழித்துள்ளோம் என்றும் சுட்டிக்காட்டிய அவர், நிறைவேற்று அதிகார முறைமைக்கு பதிலாக வேறு வழியை உருவாக்க அரசியலமைப்பு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

100 நாள் திட்டத்தின் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாடாளுமன்றுக்கு அறிவிப்போம். கசினோ, எதனோல், குடும்பவாதம் காரணமாக ஊழல் மோசடிகள் உருவாகியுள்ளன. அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கசினோ வேலைத்திட்டங்கள் அனைத்தையும் தடை செய்ய வர்த்தமானி அறிவித்தல் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். 14 நாட்களுக்குள் பாரிய நடவடிக்கைகளைச் செய்து உலக சாதனை புரிந்துள்ளோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஒழுக்கமானதொரு அரசாங்கத்தையே நாம் நடத்தி வருகின்றோம் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.



வதிரிகனை. எதிர்வீரசிங்கத்தின் "நீயின்றி எமக்கேது வாழ்வு" நூல் வெளியீட்டு விழாவை சிவஸ்ரீ எஸ்.இராஜேஸ்வரக்குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஆர்.இராஜேஸ்கண்ணா உரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக்கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன் வெளியிட்டு வைக்க திருமதி.அன்னலட்சுமி சத்திய நாதன் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வதையும், விழாத்தலைவர் எஸ்.வரதராஜன், நூலாசிரியர் கண.எதிர் வீரசிங்கம் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (01)

# மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்


(யாழ்ப்பாணம்)

மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் மானிப்பாயிலும்; யாழ்ப்பாணத்திலும் இடம்பெறவுள்ளன.

கண்ணாடிகள் தேவைப்படுவோர் மானிப்பாயில் இயங்கும் தமிழ, பௌத்த சங்கத்துடனும், யாழ்.மானிப்பாய் வீதி பெரிய முஹாதீன் பள்ளி தலைவர் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# மாங்குளம் பிரதேச மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைப் பிரிவு தேவை

கோரிக்கை விடுத்துள்ளனர் மக்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குள பிரதேச மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவினை சிறந்தமுறையில் உருவாக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிர்நாடியான இந்தமருத்துவமனையினை நம்பி 1000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. ஆனால் விபத்துகள் மற்றும் காட்டுவிலங்குகளின் தாக்குதல்கள், பாம்புக்கடி என்பன ஏற்படும்போது கூடுதலானவர்கள் கிளிநொச்சி மற்றும் வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் இதன் காரணமாக மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இடர்களை எதிர் கொண்டுவருவதாகவும் மாங்குளம் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவினை ஆரம்பித்து நோயாளர்களின் நலன்களை பேணுவதற்கான நடவடிக்கையெடுக்குமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இம்மருத்துவமனையில் ஆண், பெண் மற்றும் மகப்பேறு விடுதிகள் உள்ளபோதிலும் அவை வளப்பற்றாக்குறையுடன் இருப்பதாகவும் மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. மாங்குளம் மருத்துவமனையினை நம்பி புதிய கொலனி, பழைய கொலனி, முல்லைவீதி, துணுக்காய் வீதி, கற்குவாரி, ஏ-9 வீதி மக்கள், மாங்குளம் மக்கள் ஆகியோருடன் அயற்கிராம மக்களுமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (160)

# நல்ல படைப்புக்களை பார்ப்பதன் மூலம் மா[illegible]றங்களை ஏற்படுத்த முடியும்

## வை[illegible]த்திய கலாநிதி சிவதாஸ் தெரிவிப்பு

மனதளவில் நொந்து நூலாகிப்போயிருக்கின்ற எம்மவரை தரமான படைப்புக்களாலும் நல்ல கலைகளாலும் ஓரளவிற்கேனும் ஆற்றுப்படுத்த முடியும் என இந் நூலின் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அதிவேகமாய் சுழலும் வாழ்க்கைச்சக்கரத்திலும் அன்றாடம் நிகழும் மன உழைச்சல்களுக்குள்ளும் நல்ல நூல்களை வாசிப்பதும் நல்ல படைப்புக்களை பார்ப்பதும், அதற்காக நேரம் ஒதுக்குவதும் என்பது சற்று கடினமாகவே இருக்கும். இருப்பினும் அதுவே எம் மனப் போராட்டத்திற்கான ஓர் வடிகால்களாகவும் இருக்கும் என்பதை சில வேளைகளில் மறந்து போகிறோம் என வைத்திய கலாநிதி சிவதாஸ் தெரிவித்துள்ளார்.

முள்ளியவளை சுதர்சனின் எழுத்து, இயக்கம், நடிப்பில் உருவாகிய 'அனுபவி ராசா' எனும் குறும்படம் நேற்றுமுன் தினம் பிற்பகல் 3 மணியளவில் மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மு/குமுளமுனை மகாவித்தியாலய அதிபர் கமலகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வைத்திய கலாநிதி சிவதாஸ் மேலும் தெரிவித்ததாவது,

மிகவும் அழகான முறையில் பாடசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்ட 'அனுபவிராசா' எனும கதையானது. வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரிடம் ஊர் உறவுகள் காசு கேட்பதை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தில் ஓரிடத்தில் "ஊரில இருக்கேக்க எங்கள கணக்கெடுக்க மாட்டினம். வெளி



நாடென்டோன புதுப் புது உறவுகள் வருகினம்" இப்படிப் பேசப் படுகிறது இது உண்மையில் வெளிநாட்டிலிருக்கும் ஒவ்வொருத்தரின் ஆதங்கமாகவே இருக்குமென எண்ணுகிறேன் என்றார்.

பிற மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது, முல்லைமாவட்டத்தில் குறும்பட வெளியீடுகள் மிகக்குறைவே. களம், கதை, கரு, காட்சிப் பொருள் அதீதமாக முல்லை மண்ணில் நிரம்பப் பெற்றிருந்தாலும் போதிய தொழில நுட்ப வளங்கள் மற்றும் தொழில நுட்பவியலாளர்கள் இன்மையே இதற்குக் காரணம் எனலாம். ஆனாலும் எம்மவருக்கு இதில் எவ்வளவு ஆர்வம் இருக்கென் பதுவும் கேள்விக்குறியே.

பொதுவாகவே ஒரு படைப்பை வெளியிடும் படைப்பாளி இரண்டு விடயத்தையே அதீதம் எதிர் பார்ப்பதுண்டு. 01 மனமுவந்த பாராட்டு. 02 அப்படைப்பிற்கான அங்க்காரம். ஆனால் இதில ஒன்றையேனும் நம்மவர்களால் அப் படைப்பாளிக்கு தாராளமாக வழங்க முடிகிறதா என்பதுவும் கேள்விக்குறியே. குறும்பட வெளியீட்டினைத் தொடர்ந்து மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. நேற்று முன்தினம் சுதர்சனின் தாயாரின் பிறந்த நாளென்பதால். தாயாரின் கைகளால் மிகவும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 10 மாணவர்களுக்கு இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (11)

# கட்டுரைகள் நூல் வெளியீடு

'பார்க்கப்படாத பக்கங்கள்' தெணியானின் கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழா அல்வாய் கலையகத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழாவிற்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமைதாங்குவார். ஆசிரியை திருமதி.ரீ.ரமேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்துவார், யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ரீ.கலாமணி வெளியீட்டுரை நிகழ்த்துவார். நெல்லியடி வர்த்தகர் எஸ்.பிரேம்குமார் நூல் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நூல் நயப்புரையையும், கே.நவம் ஏற்புரையையும் வழங்குவார்கள் சாகித்தியரத்னா தெணியான நன்றியுரை வழங்குவார். (01)

## முரசின் இன்றைய பலன்

(31.01.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 17 ஆம் திகதி.
துவாதசி / சித்தம் / கரிநாள்.
மிருகசீரிடம் நட்சத்திரம் பி.ப. 04.29 வரை. பின் திருவாதிரை.
இராகு காலம 09.36 - 11.06 வரை. சுபநேரம 03.36 - 05.06 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாது காரியத்தில் கண் வையுங்கள்.

**ரிஷபம்**
போலியானவை கைக்கெட்டலாம். கவனமெடுங்கள்.

**மிதுனம்**
ஆவணக் குறைபாட்டினால் தண்டம் விதிக்கப்படலாம்.

**கடகம்**
பொருட்கொள்வனவிற்காக தீடீர்பயணம் ஏற்படும்.

**சிம்மம்**
உயர் அதிகாரிகளின் பாராட்டு எதிர்காலமுன்னேற்றத்திற்கு அனுசரணையாக இருக்கும்.

**கன்னி**
சகோதரர்களை மதித்து நடப்பதினால்பெருமைத் தக்கவைத்தல்.

**துலாம்**
தற்காலிகமாக இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்ட செய்தியறிதல்.

**விருச்சிகம்**
கைவிட்டிருந்த வெளியூர் பயணம தொடர காலை முன்வைத்தல்.

**தனுசு**
நோக்கம் நிறைவேறாமையினால் மனக்கிலேசமடைதல்.

**மகரம்**
துணைவியின் சொற்கேட்டதனால் மோசடியினின்றும் தப்பிவிடல்.

**கும்பம்**
விசாரணையின் முடிவில் விவாகத்தைக்கைவிடல்.

**மீனம்**
தொழில் முன்னேற்றத்திற்காக மேலுமொரு சந்தையைத்தேட ஆலோசனை பிறத்தல்.

# ரி -20 போட்டியில் யுவ்ராஜ்சிங்




இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்டக்காரர் யுவராஜ் சிங் ரி - 20 போட்டியில் விளையாடவுள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரராக வலம் வந்த யுவராஜ், கடைசியாக, கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான “ ரி - 20” போட்டியில் பங்கேற்றார். இதன் பின் உலகக்கிண்ண அணியிலும் இடம் கிடைக்கவில்லை.

இந்நிலையில், அவர் மெல்போர்ன் கிரிக்கெட் கிளப் அணி சார்பில் விளையாடவுள்ளார். சசக்ஸ் அணிக்கு எதிராக துபாயில் (மார்ச் 20) நடக்கவுள்ள எமிரேட்ஸ் “ ரி -20” போட்டியில் பங்கேற்கிறார்.

பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ள இப்போட்டியில் “பிங்க்” நிற பந்து உபயோகப்படுத்தப்படும். இந்த அணியில் இங்கிலாந்து அணியின் அலெஸ்டர் குக், கார்பெரி, நிக் காம்ப்டனும் அணியில் இடம்பெற்றுள்ளனர். இது குறித்து யுவராஜ் சிங் கூறுகையில், மெல்போர்ன் கிளப் அணிக்காக மீண்டும் பங்கேற்பது வியப்பாக உள்ளதாகவும், சிறப்பான வீரர்கள் அணியில் இருப்பதால், மீண்டும் வெற்றி பெறுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# முன்னேறினார் செரினா



அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் சிலாம் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் பிரிவு மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

மகளிர் ஒற்றையருக்கான தர வரிசை பட்டியலில் முதலிடத்தில் உள்ள செரினா வில்லியம்ஸ், தனது சக நாட்டவரான மேடிசன் கீசை இப்போட்டியில் எதிர்கொண்டார்.

இதில் 7-6(7-5), 6-2 என்ற நேர் செட் கணக்கில் செரினா வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

முதல் செட்டில் மேடிசன் கீ மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்திய போதிலும் சுதாரித்து விளையாடிய செரினா வெற்றியை தனதாக்கினார்.

இறுதிப்போட்டியில் அவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொள்கிறார்.

# முடிவிற்கு வந்தது தடை



சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாடடப்பட்டு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டிருந்த பாகிஸ்தானின் முகமது அமீர் மீதான தடை முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி இங்கிலாந்து சென்றிருந்த போது, சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக 6 மாத காலம் சிறைத் தண்டனையும், 5 ஆண்டுகால தடையும் முகமது அமீருக்கு விதிக்கப்பட்டது.

இவரது தடை செப்ரெம்பர் 2, 2015ம் திகதியுடன் முடிவடைகிறது, ஆனால் விசாரணைகளுக்கு முகமது அமீர் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கியதாலும், தனது குற்றங்களை ஒப்புக்கொண்டதாலும் சிறப்புச் சலுகை வழங்கப்பட்டு முன்னதாகவே தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. ஊழல் தடுப்பு அமைப்பு தலைவர் ரோனி பிளானகன் கூறியதாக ஐ.சி.சி. செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதாவது, 17 வயதில் தடை செய்யப்பட்ட அமீர் தற்போது 22 ஆவது வயதில் மீண்டும் பாகிஸ்தான் மைய நீரோட்டத்திற்கு திரும்பியுள்ளார்.

# வேகப்பந்துவீச்சில் முன்னேற்றம் அவசியம்

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சில் முன்னேற்றம் காண்பது அவசியம் என முன்னாள் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார். வேகப்பந்து வீச்சை யார் தொடக்கத்தில் வீசுவது என்பதை தேர்வு செய்வது முக்கியமாகும்.

இஷாந்த் சர்மா ஒரு மாதமாக போட்டியில் விளையாட வில்லை. இருந்த போதிலும் அவர் அவுஸ்ரேலிய ஆடுகளங்களை அறிந்திருப்பார். புவனேஸ்வர்குமார் ஸ்விங் செய்வதில் நன்றாக உள்ளார். அதில் அவர் சிறப்பாக செயற்பட்டால் அது எதிர்காலத்தில் உதவும் எனத் தெரிவித்துள்ளார்.

# கிளி. மகா வித்தியாலய வீதியோட்டப்போட்டி



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஓர் அங்கமாக வீதியோட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆண்களுக்கான போட்டி கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோவில் முன்றிலில் இருந்தும் பெண்களுக்கான போட்டி கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்றிலில் இருந்தும் ஆரம்பிக்கப்பட்டன.

போட்டியில் முதலாம் இடம்பெற்ற மாணவ, மாணவிக்கு துவிச்சக்கர வண்டியும் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு மின்விசிறிகளும் பரிசில்களாக வழங்கப்பட்டன.

அத்துடன் போட்டி இலக்கை வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் கிளிநொச்சி வலயத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக சின்னராசா, செல்வராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (160)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(கரணவாய்)

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பிரேமகாந்தன் திருமதி ரஞ்சிதமலர் பிரேமகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (18)

◆◆◆

(கரணவாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.இ.ராஜேந்திரன் திருமதி ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (18)

◆◆◆

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.இரத்தின குமார் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும் பழைய மாணவியுமான திருமதி வி.செவ்வின் இரேனியல் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.இரவிச்சந்திரன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை மாகாணக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குருபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (17)

◆◆◆

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள மெய்வன்மைப் போட்டியில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (01)

# மரதன் ஓட்டப்போட்டி

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஆண்களுக்கான போட்டி பாடசாலை முன்றிலிலிருந்து பெண்களுக்கான போட்டி மல்லாகம் சந்தியிலிருந்தும் ஆரம்பமாகவுள்ளதாக அதிபர் ம.மணிசேகரம் அறிவித்துள்ளார். (93)

# விளையாட்டுக் கழகம் தெரிவு

வதிரி தமிழ் மன்றம் வட்டுவத்தை சனசமூக நிலையம் வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழகம் என்பனவற்றின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு தமிழ்மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

2015 ஆம் ஆண்டிற்கான புதிய செயற்குழு தலைவர் - தி.வரத ராசன், செயலாளர் மா.லக்குமிகாந்தன், பொருளாளர் லோ.விஜேந்திரன், உபதலைவர் இ.சந்திரகாசன், உப செயலாளர் லோ.சுவேந்திரா, விளையாட்டு செயலாளர் க.அரவிந்தன், நூலக செயலாளர் வே.விவேகானந்தன், கல்வி செயலாளர் சி.பிரபாகரன், கலைகலாசார செயலாளர் பா.பிரபோசன், நிர்வாகசபை உறுப்பினர்கள்- வ.மனோராஜ், இ.ஜெயந்தன், எ.சற்குணம், வை.வாமதேவன், க.கௌதமன், ப.நித்தியஜோதி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (90)


# யாழ். அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

வருடாந்தம் சிறப்பாக நடாத்தப்பெற்றுவரும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேசசெயலகப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பங்குபற்றுகின்றனர். மேலும் இவ்விறுதி நிகழ்வில் ஆண்கள் பெண்களுக்கான துடுப்பாட்டம், கால்பந்து, வலைப்பந்து மற்றம் கயிறு இழுத்தல் ஆகிய விளையாட்டுக்களின் இறுதிப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.

## இன்றைய இறுதிப்போட்டியில் பங்குகொள்ளும் அணிகள்

### வலைப்பந்தாட்டம் – பெண்கள்



யாழ். பிரதேச செயலகம்




தெல்லிப்பளை பிரதேச செயலகம்

### உதைபந்தாட்டம் – ஆண்கள்



வேலணை பிரதேச செயலகம்



தெல்லிப்பளை பிரதேச செயலகம்

### கிரிக்கெட் – பெண்கள்



வேலணை பிரதேச செயலகம்



கோப்பாய் பிரதேச செயலகம்

### கிரிக்கெட் – ஆண்கள்




சங்கானை பிரதேச செயலகம்



வேல்லணை பிரதேச செயலகம்

# நிலத்தின் நலம் காக்க...

- எஸ்.கோவிந்தராஜ் -



“பூச்சிக் கொல்லிகளையும், மரபணு மாற்று விதைகளையும் பயன்படுத்தியதால், விளை நிலங்கள் பாழ்... இதைத். தவிர்க்க, உயிர்த்தன்மையை காக்கும் இயற்கை விவசாயம் அவசியம்...” - இந்த குரல்கள், உலகம் முழுவதும் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன.

பூமியில் ஒவ்வொரு இரவும், ஏறத்தாழ பல லட்சம் பேர், உணவின்றி, பசித்த வயிறுடன் உறங்குகின்றனர். மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப, உணவு உற்பத்தி பெருகவில்லை. விவசாயத்தில் நவீன தன்மையை பயன்படுத்தாததே இதற்கு காரணம்.

“விவசாயத்தில் நவீன தன்மையை, பூச்சிக் கொல்லிகளை, உரங்களை, இயந்திரங்களை, மரபணு மாற்று விதைக்ளை பயன்படுத்தா விட்டால், உணவுப் பஞ்சம் வந்து விடும். மற்ற துறைகள் நவீனத்திற்குள் நுழைந்து விட்ட நிலையில், விவசாயமும், இந்த, “நவீன ஆடை”யை அணிந்தால் தான் உயிர் பெறும் மக்கள் உயிர் வாழ வழி தரும் என்ற கருத்து, சாதாரண மனிதனையும் யோசிக்க வைக்கக்கூடியது.

நவீனத்திற்கு மாறினால், உற்பத்தி பெருகும் என்ற, “லொஜிக்” தான் இதற்கு காரணம். ஆனால், மற்ற தொழில் துறையும், விவசாயமும் ஒன்றா என்ற ஒப்பீடு எழுமானால், அது இந்த, “லொஜிக்”கை தகர்க்கக்கூடியதாக இருக்கும். உணவுப் பஞ்சம் வந்து விடும் என்பது கட்டுக்கதை என ஆதாரங்களை முன்வைத்து சண்டையிடுகிறது பிரான்சை சேர்ந்த, “பிரான்சஸ் மோரோ லேப்பி” என்ற விஞ்ஞானியின் தலைமையிலான குழு.

அந்தக் குழுவின் அறிக்கை இப்படி சொல்கிறது...

☯ உலகில் வாழும் அனைத்து மக்களின் தேவைக்கும் உரிய தானியங்கள், காய்கறிகள் விளைகின்றன. தற்போதைய மொத்த விளைச்சலை, அப்படியே தலைக்கு இவ்வளவு என்று பிரித்தால், ஒவ்வொருவருக்கும், தினசரி 1.25 கிலோ தானியங்கள் மற்றும் பயறு வகைகள், அரை கிலோ காய்கறி மற்றும் பழங்கள், கால் கிலோ பால், மாமிசம், முட்டை கிடைக்கும்.

☯ இவற்றின் மூலம், ஒவ்வொருவரும் 3,500 கலோரியை பெற முடியும். ஆனால், நன்கு வளர்ந்திருக்கும் ஒரு மனிதனின் தேவை 2,100 கலோரியில் இருந்து 2,500 கலோரி தான். தினசரி 3,500 கலோரி உணவை உட்கொண்டால், ஒவ்வொருவரும் உடல் பருமன் நோயில் சிக்கிக் கொள்ள வேண்டி வரும்.

எங்கே பிழை இருக்கிறது என யோசிக்க வைக்கிறது இந்த குழுவின் அறிக்கை. உலக மக்களிடையே பகிர்தலில் உள்ள முரண்பாடு தான், பஞ்சத்திற்கும், பட்டினிக்கும் காரணமாக அமைகிறது.

அமெரிக்க சிறுவனுக்கும், எத்தியோப்பிய சிறுவனுக்கும் பாரபட்சமின்றி சமமாய் விளைவித்து தருகிறாள் பூமித்தாய். ஆனால், ஒரு புறம் வீசி எறியப்படும், “பீட்சா”க்களும், மறுபுறம் ரொட்டித் துண்டுகளுக்கு ஏங்கும் நிலையும் தொடர நாம் தான் காரணம் என்பது உறுதிப்படுகிறது.

உணவுப் பஞ்சத்தை தவிர்க்க, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பது அடுத்த வாதமாக உள்ளது. முதல் வாதமே தோற்றுப் போன நிலையில், அடுத்த வாதமும் இப்படி நொறுங்கிப் போகிறன.

“புழு மற்றும் பூச்சிகளில் இருந்து பயிரைக் காப்பாற்றுவதற்காகவே, மரபணு மாற்றுப்பயிர்கள் உருவாக்கப் படுகின்றன. விளைச்சலை அதிகப்படுத்தும் தந்திரம் எதையும் செய்யவில்லையென, மரபணு மாற்று விதைகளை உற்பத்தி செய்யும் விதை நிறுவனங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

அப்படியிருக்க, உலக பசியைப் போக்க மரபணு மாற்று விதைகள் எப்படி உதவப் போகிறது?” என்ற இயற்கை ஆர்வலர்களின் ஆதங்கம் எதிரொலிக்கிறது.

நமது பூமி பரப்பில், 2 சதவீதம் மட்டுமே விளைநிலம். விளைச்சலை முடிவு செய்வது, நிலத்தின் உயிரோட்டமுள்ள மேல் மண் பகுதியே. இந்த மண்ணை மாசுபடுத்தி, மலடாக்கும் மரபணு மாற்று விதைகளை அனுமதிக்கக்கூடாது.

அமெரிக்காவில் இயந்திரமயமான. இரசாயன விவசாயத்தின் மூலம் விளைவிக்கப்படும் ஒவ்வொரு கிலோ உணவும், 6 கிலோ மண்ணின் உயிர்த் தன்மையை அழித்து விளைகிறது. அமெரிக்காவை பின்பற்றும் மூன்றாம் உலக நாடுகளிலோ, 12 கிலோ மண்ணின் உயிர் தன்மையை அழித்து ஒரு கிலோ உணவு பெறப்படுகிறது.

அப்படி இருக்கையில், மரபணு மாற்று விதைகளை அடிப்படையா[illegible] கொண்ட, மேற்கத்திய விவசாய [illegible]யில், நமது விவசாயம் அமையுமா[illegible] அது ஏற்படுத்தும் விளைவுகளை கற்பனைக்குள் கொண்டு வர முடியவில்லை. விளைநிலத்தோடு விளையாடும் முன், உலகமும், அரசும், அரசியல்வாதிகளும், விஞ்ஞானிகளும், மேதாவிகளும் யோசிக்கட்டும்.

---

# நில நடுக்கோடு

தென் அமெரிக்காவில் ஈகுவடோர் என ஒரு நாடு உள்ளது. பூமியிலிருந்து சுமார் 9350 அடி உயரத்தில் அமைந்துள்ள இதற்கு, “GOD FACE CITY OF HEAVEN” மற்றும் LIGHT OF AMERICA என பல செல்லப் பெயர்கள் உண்டு. உலக வரைபடத்தில் ஈகுவடோரின் அமைப்பை பார்த்தால், கடவுளின் முகம் போல் காட்சியளிக்கும்.



இந்த ஈகுவடோரின் தலைநகரம் க்யூடோ (Quito) பழைய பெயர் “சான்பிரான்சிஸ்கோ” இந்த நகரிலிருந்து 1 கிலோமீட்டர் தூரத்தில் பூமியின் நிலநடுக்கோடு உள்ளது. இதுதான் இந்த ஊரின் சிறப்பு. அதனை காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

இந்த குறிப்பிட்ட இடத்தில் நிலநடுக்கோட்டிற்கு வடக்கே தெற்கேயுள்ள தொலைவு சைபர் (பூஜ்யம்). இதனை சுட்டிக்காட்ட சிவப்பு மையினால் நீளமாகக் கோடு கிழித்து வைத்துள்ளனர். இந்த கோட்டை காலால் தொட்டால் உங்களுக்கு ஒரு சான்றிதழ் வழங்கப்படும்.

இந்த கோடு அருகே நாம் சென்றதும் நமக்கு சில சோதனைகளைச் செய்து காட்டி அசத்துகின்றனர். ஒரு வாளியில் தண்ணீர் நிரப்பி, சிவப்பு கோட்டின் ஒரு பக்கம் உள்ளே நின்று, அந்த தண்ணீரை மற்றொரு பாத்திரத்தில் ஊற்றுக்கின்றனர். இப்படி ஊற்றும் போது, நீரானது, மணிக்கூட்டுச் சுழற்சி முறையில் சுழன்று, பாத்திரத்தில் விழுகிறது, அடுத்து அதே பரிசோதனையை கோட்டின் மற்றொரு முனையில் நிகழ்த்துகின்றனர். அப்போது அதே தண்ணீர், எதிர்ச் சுழற்சி முறையில் சுழன்று பாத்திரத்தில் விழுகிறது. ஆச்சர்யம் ஆனால் உண்மை.

இரண்டாவதாக, நம்மை, கைகளை பக்கவாட்டில் இருபுறமும் நன்றாக விரித்துக் கொண்டு, கண்களை மூடியபடி, அந்த சிவப்புக் கோட்டின் மீது நடக்கச் சொல்கிறார்கள். சில விநாடிகளில் நாம் தடுமாறுகிறோம் பலர் விழுந்து விடுகின்றனர். உடனே பரிசோதனை நடத்துபவர். அந்த இடத்தில் எழும் உந்தல், நம்மை தடுமாறச் செய்கிறது எனக் கூறுகிறார்.

மூன்றாவதாக ஒரு ஸ்டாண்ட் கொண்டு வந்து வைத்து, அதன் மீது ஒரு முட்டையை வைத்து அதனை நிற்க வைக்கச் சொல்லுகின்றனர். பலர் முயற்சித்து முடியாதபோது அதனை எப்படி ட்ரிக்காக நிலை நிறுத்துவது என பயிற்சியாளர் செய்துகாட்டுகிறார்.

அடுத்து, ஒரு குறிப்பிட்ட இடத்தில் நில நடுக்கோடு 00-00-00 தொலைவு என ஒரு சின்னம் செய்து வைத்துள்ளனர். அதன் பின்னால் நின்று நாம் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம்.

இவை முடிந்ததும், நீங்கள் நில நடுக்கோட்டை தொட்ட சாதனையாளர் என சான்றிதழ் வழங்கி கௌரவிக்கிறார்கள்.

இந்த இடத்தில் ஸ்பானிஷ் மொழியின் தாக்கம் அதிகம். ஆங்கிலம் தெரிந்தால் மட்டுமே சமாளிக்கலாம். இந்தப் பகுதியை யுனெஸ்கோ 1978ஆம் ஆண்டு உலக பாரம்பரிய மிக்க இடமாக அறிவித்து கௌரவித்துள்ளது.

1703 ஆம் ஆண்டு, சார்ள்ஸ் மாரிடிலா என்ற பிரெஞ்ச் கண்டுபிடிப்பாளர். நிலநடுக்கோட்டை கண்டறிந்து கூறினார். உண்மையில் அது இன்று, இன்றைய நிலநடுக்கோடு பகுதியிலிருந்து 200 மீட்டர் தள்ளியுள்ளது.

ஆராய்ச்சிகளுக்குப்பின், தற்போது சிவப்பு கோடிட்டுள்ள இடமே மைய நிலநடுக்கோடு பகுதி என ஏற்கப்பட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் அங்கு நினைவுச்சின்னமும் எழுப்பப்பட்டது.

ஈகுவடோருக்கு ஒரேநாளில் நாலு சீசன்களையும் காணும் நகரம் என செல்லப் பெயருமுண்டு. குறைந்தபட்சம் வெயிலையும் குளிரையும் நிச்சயம் சந்தித்துவிடலாம்.

---


- JACKDAW என்ற பறவை தன்னுடைய கூடு கட்ட மின்னும் பொருள்களை மட்டுமே பயன்புடுத்துகி[illegible]
- SKYLARK பறவை காற்றில் ஒரே இடத்தில் [illegible] தங்கும் திறனுடையது.
- NIGHTJAR என்ற பறவை பறக்கும்போது



## விநோத [illegible]

எப்போதும் வாயைத் திறந்து வைத்துக்கொண்டே இருக்கிறது. பூச்சிகளைப் பிடிக்கவே இவ்வாறு செய்கிறது.

- OSTRICH பறவைகளுக்கு பற்கள் கிடையாது. எனவே [illegible] உண்பதற்காகவே கூடவே கற்களையும் விழுங்குகின்றன.
- GREBE என்னும் பறவை அதன் சிறகுகளை உண்ணும் [illegible] கொண்டது.
- ஈமு பறவையில் ஆண்தான் அடைகாத்து குஞ்சு பொரிக்[illegible]
- ஏரிகளில் கூடுகட்டி வாழும் “ஜகனால்” பறவைக்குஞ்சு, முட்டையைவிட்டு வெளிவந்தவுடனே நீந்தத் தொடங்கிவிடும்.
- “றொபின்ஸ்” குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுட[illegible] அவற்றை விட்டுவிட்டு தாய்ப்பறவை பறந்துவிடுமாம்.
- “ஹீபோ” பறவை ஒரு முட்டை இட்டவுடனே அடைகாக்கத் துவங்கிவிடுமாம், முதல் முட்டையிலிருந்து வந்த குஞ்சு வளர்ந்து இரை தேடுகின்ற நிலையில், கடைசி முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும்.
- “ஆள்காட்டிக் குருவி” கூடு கட்டுவதில்லை, தரை[illegible] அதைச் சுற்றி கூழாங்கற்களை வைத்து முட்டையிடும்.
- ஆண் தூக்கணாங் குருவி முதல்பாதி கூட்டைகட்டிய[illegible] பிற[illegible]யின் சம்மதம் கிடைத்தால்தான் மீதிப்பாதிக் கூட்டைக் கட்டும்.
- கோல்டன் கழுகு வெவ்வேறு இடங்களில் இரண்டு கூடு[illegible] ஓர் ஆண்டில் ஒரு கூட்டிலும் மறு ஆண்டில் மற்றொரு கூட்[illegible] தொடர்ந்து ஒரே கூட்டில் வசிக்காது.
- பாப்ளர் என்ற பறவை தனியாகவோ, கூட்டமாகவோ பற[illegible] ஏழாகத்தான் பறக்கும்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முட்டை இடும் பறவை[illegible]
- பறவைகளிலேயே அதிக நாள்கள் (அதாவது 56 நாள்க[illegible] பறவை: பால்மர்.



டி.ஆர்.ராஜகுமாரி பிரபலமானதற்கு அவருடைய உருவத் தோற்றமே காரணம். ராஜகுமாரி பிரமாத பாடகியல்ல, நடிப்பிலும் அப்படித்தான்! அழகில் அவரை விடச் சிறந்தவர்கள் நிறைய பேர் இருக்கின்றனர். இருப்பினும், ராஜகுமாரி என்றால், இரசிகர்களுக்கு ஒரு மயக்கம். அந்த மயக்கம் இருக்கும் வரையில், ராஜகுமாரி எது செய்தாலும், இரசிகர்களுக்கு கற்கண்டு தான். அதை மறுத்துப் பேசினால், நம்மை அடிக்கவும் துணிவர்.

முதன் முதலில், குமார குலோத்துங்கன் படத்தில் தான் ராஜகுமாரி தோன்றினார். பின்,

# 1944இல் சினிமா விமர்சனம்!

மந்தாரவதி மற்றும் சூர்ய புத்ரி ஆகிய படங்களில் நடித்தார். இந்த மூன்று படங்களுமே வெற்றி பெறவில்லை. அடுத்து, இயக்குநர் கே.சுப்ரமணியத்தின் படத்தில் நடித்தார் ராஜகுமாரி.

யார் யாருக்கு எந்த வேடம் கொடுத்தால் சோபிப்பர் என்பதை கண்டறிவதில் சுப்ரமணியம் கெட்டிக்காரர். ராஜகுமாரியிடம் வசிய சக்தி நிறைந்திருப்பதை அறிந்தார். அதை, கச்சதேவயானி படத்தில் சரிவரப் பயன்படுத்திக் கொண்டார். படுதோல்வியுறும் என்று விமர்சிக்கப்பட்ட அந்தப் படம், வசூலை அள்ளிக் குவித்தது. கச்ச தேவயானி ராஜகுமாரி, சினிமா இரசிகர்களின், "ஸ்வப்பன தெய்வ"மாக ஆகிவிட்டார். அன்று முதல், அவர் பெயருக்கு ஒரு ...திர சக்தி ஏற்பட்டது. படங்களுக்கோ கொள்ளை வசூல்!

கச்சதேவயானி படத்துக்குப் பின், மாடர்ன் தியேட்டர்ஸ் படங்க...ன, சதி சுகன்யா மற்றும் மனோன்மணியில் நடித்தார் ராஜகுமாரி. ஆனால், கச்சதேவயானியில் கிடைத்த அளவுக்கு இப்படங்களில் பெயர் கிடைக்கவில்லை. பின்னர், சிவகவியில் தோன்றினார். மீண்டும் புகழ் உயரத் துவங்கியது. நடிப்பிலும், நாட்டியத்திலும் புகழ் பெற்றார். குபேர குசேலா அவர் பெயரைப் பிரமாதப்படுத்தி விட்டது. காரணம், வசிய மருந்தை, அவர் அளவுக்கு அதிகமாகவே பிரயோகித்து விட்டார். அதனால், பலத்த கண்டனங்களும் கிளம்பின. கடைசியாக, அவர் நடித்து வெளிவர இருக்கும், பிரபாவதி, ஹரிதாஸ் மற்றும் சாலிவாஹனன் ஆகிய படங்களிலும், தம் வசிய மருந்தை சரிவர உபயோகித்திருப்பார் என்றே எண்ணுகிறேன். ராஜகுமாரியின் வசிய மருந்து, இரசிகர்களுக்கு திகட்டல் ஏற்படாதபடி, ஓர் அளவுடன் இருக்க வேண்டும் என்பது தான் என் கோரிக்கை.

தற்போது, 22 வயது நிரம்பியுள்ள, (5.5.1922) ராஜகுமாரி, சங்கீதம், நாட்டியம், நடிப்பு ஆகியவற்றில் பெயர் பெற்று வருவது பரம்பரை விசேஷத்தால் தான் எனக் கூறலாம். சங்கீதத்தில், புகழுடன் விளங்கிய தஞ்சை குஜலாம்பாளின் இண்டாவது பெண் வயிற்றுப் பேத்தி தான் ராஜகுமாரி. இவரது சொந்தப் பெயர் ராஜாயி; சினிமாவுக்கு வந்ததும் ராஜகுமாரி என்று அழகான ...பரை சூட்டிக் கொண்டார்.

**(1944 இல், குண்டூர் கோபால் என்ற விமர்சகர் எழுதியதிலிருந்து)**



## ...பறவைகள்!

...வ அவை அரைத்து

...ும் பழக்கம்

...ரிக்கும்.

...டும்.

...வுடன்

...சி

...ப் பள்ளமாக்கி

...பிறகு பெண் குருவி

...டும்.

...டுகளைக் கட்டும்.


...கூட்டிலும் வசிக்கும்.

...பறக்காது. ஏழு,

...றவை ஆல்பர்ட்ராஸ்.

...ர்கள்) அடை காக்கும்

# இந்த நாட்டில இப்ப அச்சச் சூழல் இருக்கெண்டிறியளா... இல்லையெண்டிறியளா...



## வெள்ளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

இந்தியாவிலை இருக்கிற எங்கடை தமிழ் அகதிகளை நாட்டுக்கு அழைச்சு அவர்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுங்கோ எண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை எங்கடை மாகாணத்தின்ரை மூண்டு அமைச்சர்மார் சந்திச்சுக் கேட்டிருக்கினை.

நல்லதுதான். மைத்திரி அரசாங்கம் அடிவானத்தில தோன்றின விடிவெள்ளி எண்டு தமிழ்த் தேசிய வியாபாரப் பத்திரிகை கட்டுரை எழுதுது. இந்தப் பத்திரிகை 2004இலை மகிந்தவையும் இப்பிடித்தான் எழுதினது பாருங்கோ!

இப்பிடி நம்பிக்கை வெளியிடுகிறது நல்லதுதான். நிலவுக்கு அஞ்சி பரதேசம் போகேலாதுதானே. தமிழ்நாட்டிலை சிறப்பு முகாம்கள் எண்ட பேரிலை திறந்த சிறைச்சாலைக்குள்ளை அதுகள் வாழுறதை விட இங்கை சொந்த நிலத்திலை குந்தியிருந்து கூழோ கஞ்சியோ குடிக்கிறதுதான் நிம்மதி!

ஆனால் இந்த நம்பிக்கையை, இஞ்சை திரும்பினால் ஒரு பிரச்சினையும் வராது எண்ட மனஓட்டத்தை ஆர் உருவாக்கிறது? முதலிலை அகிம்சைப் போராளி மாவையண்ணை தன்ரை மனிசியையும், பிள்ளையையும் முதலிலை இங்கை கொண்டு வர வேணும்.

அடுத்ததாய் தன்ரை குடும்பத்தை அமைச்சர் ஐங்கரநேசன் இங்கை கொண்டு வர வேணும். சுரேஸும் இந்தியத் தொடர்புகளை அறுத்து உறவுகளை இங்கை கூப்பிட வேணும்.

அதுகளைச் செய்து போட்டு சனங்களை திருப்பி அழைச்சால் அது பொருத்தமானது. அதை விடுத்து ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே எண்டு கூட்டமைப்புத் தலைவர்கள் நாடகமாடுறது நல்லாயில்லை.

அதே கருத்தை ஐரோப்பிய நாடுகளிலை இருக்கிற ஆக்கள் தொடர்பிலை சொல்வார்களா? அங்கை முகாம்களிலை இருக்கிற, ஒளிச்சு வாழுகிற எங்கடை ஆக்களை - குடியுரிமை அற்றவர்களை - நாட்டுக்கு அழைச்சு அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கேலாதா?

அது முடியாது. புதிய அரசாங்கம் கடந்த ஆட்சிக் காலத்திலை வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற ஊடகவியலாளர்களை நாடு திரும்புமாறு கேட்டிருக்குது. அதன்படி சிங்கள ஊடகவியலாளர்கள் பலர் நாடு திரும்பியிருக்கினை. ஆனால் தமிழ் ஊடகவியலாளர்கள் நாடு திரும்பேல்லை. ஏனெண்டால் கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடுகையிலை எப்பிடி நாங்கள் நாடு திரும்பேலும் எண்டு சாட்டுச் சொல்லியிருக்கினை.

போராட்டத்தோடை எந்தத் தொடுசலும் இல்லாமல், அரசாங்கத்துக்கு எதிராய் ஒண்டுமே செய்யாமல் இஞ்சை கமராவோடை கொஞ்சநாள் சுத்திப் போட்டு, செத்துப் போன சில ஊடகவியலாளர்களோடை சேர்ந்து செயற்பட்டதாலை அச்சுறுத்தல் எண்டு சொல்லி என்.ஜி.ஓக்காரர்கள், ஊடகச் சங்கங்களின்ரை கடிதங்களோடை அடைக்கலந் தேடி அசைலம் அடிச்சவைதான் கன தமிழ் ஊடகவியலாளர்கள்!

ஒரு பேப்பர் முதலாளி காசு வாங்கிக் கொண்டு அனுப்பினவையும் இதிலை உள்ளடக்கம். இவைக்கு ஆராலையும் எந்த அச்சுறுத்தலும் இல்லை. அப்பிடி இருக்கிறதாய் காட்டி ஹீரோத்தனம் காட்டிறதுதான் இவையின்ரை வேலை.

கடந்த அரசாங்கத்திலை ஆட்சியிலை இருந்தவை தொடர்ந்தும் உள்ளூரிலை இருக்கினை. சுதந்திரமாக நடமாடுகினை. இனியும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலை திரும்பவும் போட்டியிடப் போகினை. ஆனாலும் சிங்கள ஊடகவியலாளர்கள் நாடு திரும்பி இருக்கினை. தமிழ் ஊடகக் கொம்புகளோ அச்சுறுத்தலாம். பாதுகாப்பு இல்லையாம்.

அப்பிடியெண்டால் மைத்திரி அரசாங்கத்தைப் பார்த்து "எங்களுக்கு பொடிகாட் தாருங்கோ. நாட்டுக்கு வாறம்" எண்டு கேளுங்கோவன். அதை விடுத்து புலுடா விட்டு, பூச்சாண்டி காட்டாதேங்கோ!

ஒருவேளை மண்டையன் புகழ் சுரேசும், மன்னார் செல்வம் அடைக்கலநாதனும், வவுனியா சித்தார்த்தனும், மாகாண சபையிலை அனந்தியும், சிவாஜிலிங்கமும் புதிய அரசாங்கத்தோடை இணைஞ்சு நிக்கிறதை வச்சுக் கொண்டு பயப்பிடுகினையோ தெரியேல்லை.





ஐரோப்பிய நாடுகளிலைதான் எங்கடை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாரிலை பல பேருடைய குடும்பங்களும் இருக்கினை. அவைக்கு ஆதரவு அளிக்கிறவையும் அங்கைதான் இருக்கினை. இஞ்சை பிரச்சினை இல்லை எண்டு வந்தாப் போலை கனபேருக்கு ஏக்கக் காய்ச்சல். லண்டனிலை இருந்து கொஞ்சப் பேரைத் திருப்பி அனுப்ப முஸ்தீபு நடக்குது. அதிலையிருந்து எப்பிடித் தப்பிறது எண்டு பலரும் அங்கலாய்ச்சுக் கொண்டிருக்கினை. இந்த நிலையிலை ஐரோப்பாவிலையிலிருந்து நாடு திரும்புங்கோ எண்டு ஆரையும் கூட்டமைப்பு கேக்காது. அப்பிடிக் கேட்டால் இப்ப கிடைக்கிற வெள்ளைச் சல்லியும் இனிக் கிடைக்காது.

சுவாமிநாதனைச் சந்திச்ச அமைச்சர் குருகுலராசாவின்ரை பிள்ளையள் எல்லாரும் வெளிநாட்டிலை. செல்வத்தின்ரை குடும்பம் சுவிசிலை. மாவையின் பெடியள் கனடாவிலை. சுரேசுக்கு கனடாவிலை குடியுரிமை. அந்தச் சுகபோகங்களை விடுத்து இஞ்சை வந்து என்ன செய்யிறது? ஊருக்குத்தான் உபதேசம். எங்களுக்கில்லை. உரத்துச் சொல்லுங்கோ கூட்டமைப்பாரே!

# புதிர்ப்போட்டி இல. 26

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

**கீழே காட்டப்பட்டுள்ள எண்கோலத்தைப் பார்க்க இங்கு எண்கள் ஏதாவொரு கோலத் திற்கமைய இடப்பட்டுள்ளன. அவற்றினைக் கருத்திற்கொண்டு L,M,N,O,P போன்ற கூடுகளுக்கு இடப்படவேண்டிய எண்ணைத் தரப்பட்டுள்ள சரியான விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 1 |
| | | | | | | | | 2 | 3 |
| | | | | | | | 3 | 5 | 4 |
| | | | | | | 4 | 7 | 7 | 11 |
| | | | | | 5 | 9 | 10 | L | 15 |
| | | | | 5 | 10 | 13 | 23 | 24 | 39 |
| | | | 4 | 9 | M | 28 | 33 | 57 | 54 |
| | | 3 | 7 | 14 | 29 | 41 | 74 | N | 135 |
| | 2 | 5 | 0 | 25 | 44 | 85 | 107 | 188 | 189 |
| 1 | 3 | 8 | 19 | 39 | 83 | 126 | 233 | 269 | P |

01) L இன் பெறுமானம்
(1) 14 (2) 12 (......)
(3) 17 (4) 22

02) M இன் பெறுமானம்
(1) 15 (2) 22 (.....)
(3) 24 (4) 32

03) N இன் பெறுமானம்
(1) 125 (2) 90 (.....)
(3) 81 (4) 151

04) O இன் பெறுமானம்
(1) 10 (2) 11 (.....)
(3) 21 (4) 16

05) P இன் பெறுமானம்
(1) 200 (2) 268 (.....)
(3) 455 (4) 458

**இலக்கம் 06 தொடக்கம் 08 வரையிலான ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் 5எண் சோடிகள் அடைப்பினுள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாக்களுக்காகவும் சோடிகளுக்குரிய இரு எண்களுக்கிடையில் பொதுவான தொடர்பு காணப்படக்கூடியவாறு 4சோடிகள் படி முன் வைக்கப்பட்டுள்ளன. அந்த தொடர்புகளுக்கு ஒத்திசையாதவாறு உள்ள எண் சோடியைத் தரும் தெரிவினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக**

06) 1. (1,4) 2. (2,6) 3. (3,16)
4. (4,25) 5. (5,36) (......)

07) 1. (6,24) 2. (8,18) 3. (9,16)
4. (10,12) 5. (16,9) (.....)

08) 1. (6,36) 2. (7,56) 3. (8,72)
4. (9,90) 5. (10,110) (.....)

09,10ஆம் வினாக்களில் பிரசினமும் இரு கூற்றுக்களும் தரப்பட்டுள்ளன

- கூற்று 1 இனால் மட்டும் பிரசினத்திற்கு விடையைப் பெறப் போதுமானதெனின் A எனவும்
- கூற்று 2 இனால் மட்டும் பிரசினத்திற்கு விடையைப் பெறப் போதுமானதெனின் B எனவும்
- கூற்று 1மற்றும் கூற்று 2ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கருதி விடையைக் காண முடியுமெனின் C எனவும்
- கூற்று 1ஐ வேறாகவும் கூற்ற 2ஐ வேறாகவும் விடையைப் பெறுவதற்காகப் பயன்படுத்த முடியுமெனின் D எனவும்
- இரு கூற்றுக்களும் விடையைக் காண்பதற்குப் பொருத்தமற்றது எனின் E எனவும்

அவ்வவ் வினாக்களுக்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

09) பிரசினம் : ஐம்பது பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றைத் தட்டச்சிடுவதற்காக A,B ஆகிய இரு தட்டெழுத்தாளர்கள் ஒன்றாக வேலை செய்தால் 10 மணித்தியாலயத்தில் வேலை நிறைவு பெறும். தட்டெழுத்தாளர் A மட்டும் வேலை செய்தால் அதற்காக எவ்வளவு நேரம் செலவாகும்?

கூற்று 1: B இன் இரு மடங்கு வேகத்தில் வேலை செய்ய A யினால் முடியும்.

கூற்று 2: தட்டெழுத்தாளர் D மட்டும் வேலை செய்தால் இதற்காக 14 மணித்தியாலங்களை எடுப்பார்.

10) பிரசினம்: தேர்தலில் கூடிய விருப்பு வாக்குகளை பெற்றவர் யார்?

கூற்று 1: கணேஷன் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை 250 000 ஆகும்.

கூற்று 2: கணேஷன் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை விட அண்மையிலுள்ள மகேசன் பெற்ற வாக்குகள் கணேஷனை விட 50 000 இனால் அதிகம்

**11 தொடக்கம் 13 வரையுள்ள வினாக்கள் ஆசிரியர்கள் கற்பிக்கும் தனிப்பட்ட வகுப்புக்கள் பற்றியவை கமல், விமல், அமல் என்ற ஆசிரியர்களின் வகுப்பு நாட்கள் பின்வருவனவாகும்.**

- ஆசிரியர் கமல் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் பி.ப.9:30 தொடக்கம் பி.ப4.30 வரைக்கும் கற்பிப்பார்
- ஆசிரியர் விமல் திங்கட்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் மு.ப.10.30 தொடக்கம் பி.ப.3.30 வரைக்கும் கற்பிப்பார்
- ஆசிரியர் அமல் திங்கட்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்களில் மு.ப.9.30 தொடக்கம் பி.ப.12.30 வரைக்கும் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் பி.ப.3.30 தொடக்கம் பி.ப.4.30 வரைக்கும் கற்பிப்பார்.

**இதற்கேற்பப் பின்வரும் வினாக்களுக்குரிய விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

11. வாரத்தின் எந்நாளில் / நாட்களில் ஒரு குறித்த நேரத்தில் மூன்று ஆசிரியர்களையும் சந்திக்கலாம்?
(1) திங்கட்கிழமை (2) புதன்கிழமை
(3) வியாழக்கிழமை (4) வியாழக்கிழமை, ஞாயிற்றுகிழமையும்

12. முற்பகலில் சந்திக்க முடியாத ஆசிரியர் / ஆசிரியர்கள் யார்?
(1) கமல் (2) விமல்
(3) அமல் (4) விமலும்,கமலும்

13. ஒரு ஆசிரியரைச் சந்திப்பதற்கு வாரத்தில் எந்நாளில் குறைந்தபட்சம் சந்தர்ப்பங்கள் உள்ளன?
(1) செவ்வாய்க்கிழமை (2) புதன்கிழமை
(3) வெள்ளிக்கிழமை (4) சனிக்கிழமை

## சென்றவார விடைகள்

1) 6 x 55 - 5 x 50
= 330 - 250
= 80 புள்ளிகள்

2) $72000 \times \frac{90}{100}$
= ரூ.64800

3) தரப்பட்ட விடைகளின் அடிப்படையில் Dயை தெரிந்தெடுக்க முடியாது. ஆனால் நிபந்தனைகளின் படி Gயை கட்டாயம் தெரிந்தெடுக்க வேண்டியுள்ளதால் 5ஆம் விடையே சரியானது

4) 1ஆம் விடையில் D அல்லது G இல்லை
2ஆம் விடையில் F உள்ளதால் C இல்லை
4ஆம் விடையில் Bயும் உள்ளது Dயும் உள்ளது
5ஆம் விடையில் Dயும் உள்ளது Gயும் உள்ளது
எனவே நிபந்தனைகளின் படி 3ஆம் விடையே சரியானது

5) 1ஆம் விடையில் D உள்ளது. ஆனால் தரவில் Bயும் உள்ளது.
2ஆம் விடையில் கட்டாயமாக இடம்பெற வேண்டிய D அல்லது G இல்லை
4ஆம் விடையில் B இடம்பெற்றதால் பொருத்தமற்றது
5ஆம் விடையில் F இடம்பெற்றதால் Cயும் இடம்பெற வேண்டும்
∴ 3ஆம் விடையே சரியானது

6) 3:2

7) 8x3 ÷ 6
= 4 நாட்கள்

8) $\frac{90}{100} \times 20 = 18km$
= 11 x 18km = 198km

9) 1ஆம் விடை
10) 1ஆம் விடை
11) 1ஆம் விடை

அங்கு ஆரம்ப இறுதி தகவல்களை கருத்திற் கொண்டு தரப்பட்ட விடைகளின் ஊடாக ஏனைய பகுதிகளை இலகுவாக கண்டறியலாம்

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.டிலக்ஷன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்தியசாயி பாடசாலை

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பெயர் :- சி.சரூபன்
தரம் :- 06
பாடசாலை:-யா/மகாஜனக்கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------
பாடசாலை :- ------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------
வீட்டு முகவரி :- ------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------

# சிற்றாற்றில் நீர்த் தேக்கம் மாங்குளத்தில் டெங்கு அபாயம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் நகரத்தில் உள்ள சிற்றாற்றில் நீர் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்கு போன்ற அபாய நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பக்கமிருந்து துணுக்காய்ப் பக்கமாக மாங்குளம் நகரத்தினை குறுக்கறுத்து சிற்றாறு ஒன்று பாய்கின்றது. மழை காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் அங்கு தற்போது மழைவெள்ளம் தேங்கிநிற்கும் நிலை காணப்படுகின்றது.

மாங்குளம் நகரத்தில் பல உணவகங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், மருத்துவமனை, பொலிஸ்நிலையம் எனப் பெருந்திரளான மக்கள் கூடும் இடமாக உள்ளதுடன் துணுக்காய், மாந்தைகிழக்கு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் செல்லும் மக்கள் தரித்துச் செல்லும் முக்கிய நகரத்தின் மத்தியில் டெங்கு பரவக்கூடிய நிலையில் மழைவெள்ளம் தேங்கி நிற்பது தொற்றுநோய்களை ஏற்படுத்துகின்ற அபாயநிலையினை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது. (160)

## வடமாகாணத்தில் பறவை ஆய்வியல்

இலங்கை களப்பறவையியல் குழு வடமாகாணத்தில் பறவை ஆய்வியலை மேற்கொள்ளவுள்ளது. அதாவது பாடசாலைகளில் இயற்கை ஊக்குவிப்பு கழகத்தினூடாக (Nature Appreciation Club-NAC) பலவேறுவிதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன அந்த வகையில நாமும், இலங்கை களப்பறவையியல் குழுவும் இணைந்து பறவை ஆய்வியலை ஒவ்வொரு வருடமும் மேற்கொண்டுவருகின்றோம். இவ் வருடமும் பறவை ஆய்வியலை கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர் சரத்கொட்டகம (தலைவர் இலங்கை களப்பறவையியல் குழு) மற்றும் அவரது குழுவினரும் ஆய்வுகளை மேற்கொள்ள வருகைதரவுள்ளனர்.

இவ் ஆய்வியலில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வமுடையவர்களும் கலந்து கொள்கின்றார்கள்.

மேலும் ஆய்வுகள் நடைபெறும் திகதிகள் -

இன்று முல்லைத்தீவிலும் நாளை யாழ்ப்பாணத்திலும் 02.ஆம் திகதி யாழ்ப்பாணம். 03.ஆம் திகதி நெடுந்தீவிலும் 04.ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது. (25)

## தைப்பூசத் திருவிழா

பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள மயிலிட்டி வீரமாணிக்க தேவீன்துறை கண்ணகி அம்மன் ஆலயத்திலும், மயிலிட்டி முனையன் வளவு முருகன் ஆலயத்திலும் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பூசத்திருவிழாவை மிகச் சிறப்பாக நடாத்துவதற்கான அனுமதியைப் பாதுகாப்புப்படையினர் வழங்கியுள்ளதாக இரு ஆலயங்களின் பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

பக்த அடியார்கள் மயிலிட்டிக்குச் சென்று இவ் ஆலயங்களின் தைப்பூசத்திருவிழாக்களில் கலந்து கொள்வதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறையிலிருந்து இவ் ஆலயங்களுக்குச் செல்வதற்கான வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பக்த அடியார்கள் அனைவரும் காலை 7.30 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். அங்கிருந்து ஆலயங்களுக்குப் பக்த அடியார்கள் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான தொலைபேசி இலக்கங்கள் 0774820532, 0776569940, 0789143019, 0789114026 என்ற கைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

## கைதடி முதியோர் இல்ல முதியவர்கள் சுற்றுலா

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்ல முதியவர்கள் அண்மையில் கிளிநொச்சிக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி அறிவியல் நகர் எஸ்.கே.முதியோர் இல்லம், இரணைமடு இந்து கிறிஸ்தவ தேவாலயங்கள், செஞ்சோலை சிறுவர் இல்லம் உட்படப் பல இடங்களையும் இவர்கள் பார்வையிட்டதோடு அங்குள்ளவர்களுடன் தமது அனுபவப்பகிர்வுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

இல்லத்தில் தங்கி வாழும் ஆண்கள், பெண்கள் என சுமார் 40 முதியவர்கள் இச் சுற்றுலாப் பயணத்தில் கலந்து கொண்டனர். இவர்களை இல்ல அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள் ஆகியோர் வாகனத்தில் அழைத்துச் சென்று மீண்டும் பாதுகாப்பாக இல்லத்துக்குக் கூட்டி வந்தனர்.

காலை 9.00 மணிக்குப் புறப்பட்டு மாலை 5.00 மணிக்குத் திரும்பி வந்தனர். இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்கள் அடிக்கடி வெளியிடங்களுக்குக் அழைத்து செல்லப்படுவதினால் அவர்களுக்கு தனிமையுணர்வு போக்கப்படுவதாக அவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)



கடந்த திங்கட்கிழமை அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலய மணவாளக்கோல உற்சவத்தில் சஙகாபிசேக நிகழ்வில் பெண் கலைஞர்கள் நாதஸ்வரம் தவில் இசைப்பதைக் காணலாம். (90)

# வாரம் ஒரு காரம்

## இனம் என்கின்ற கனம் குறையும் வரை இலங்கையில் இனப்பிரச்சினை தீராது




இல்லாத ஓர் இணக்கப்பாடு இன்று ஏற்படுகின்ற தென்றால் இனம் என்கின்ற கனம் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் குறைந்தமையே ஆகும். விடுதலைப் போராட்டத்தில் தோற்று விளிம்பிற்கு வந்த தமிழினம் விரைவில் ஓர் இணக்கப்பாட்டினை விரும்பியமையால் வந்த விளைவு இது. மறுபுறத்தில் பேரினவாதத்தின் பக்கம் இருந்த ஆளணிகள் இனித் தீர்விற்கு வேறு வழியில்லை இனம் என்கின்ற கனத்தைக் குறைக்க வேண்டும் என்று சிந்தித்ததன் விளைவு இது.

இனம் என்கின்ற பகுபாடு ஒரு நாட்டில் வலுப் பெறும் போது தான் இனப்பிரச்சினை என்கின்ற எண்ணக்கரு அங்கு விஸ்வரூபம் பெறுகின்றது. இனங்களிற்கிடையில் வாழ்வியல் ரீதியான ஒன்றிணைவு ஏற்படும் போது இனப்பிரச்சினை என்பது பெரும் போராட்டங்களாக வெடிக்காது.

இந்தியாவில் ஏராளமான இன மக்கள் இருந்த போதும் சுதந்திரத்திற்குப் பின் எந்த இனப்பிரச்சினைகளும் விஸ்வரூபம் பெறவில்லையே... இலங்கையில் கடந்த 50 வருடங்களிற்கு மேல் இடம் பெற்று வரும் அர்த்தமற்ற உளநாட்டு யுத்தங்கள் போல் அங்கு நடந்ததா?..... இலங்கையில் தீர்க்கப்பட முடியாத ஒன்றாக இனப்பிரச்சினை காணப்படுவதற்கு அடிப்படைக் காரணம் **இன ஒன்றிணைவிற்கு சந்தர்ப்பம் கிடைக்காமையே ஆகும்.**

அன்று தொட்டு இன்று வரை இருந்த அரசியல் தலைவர்கள் பிரிவினை வாதத்தையும் பிரதேச வாதத்தையும் முன்னிறுத்தி தமது அரசியல் பிழைப்பிற்கு விளை பொருட்களாக இனவாதத்தை விதைத்தார்களே தவிர 'பரஸ்பர **இணக்கம்**' இனப்பிரச்சினைக்கு தீர்வினை தேடித்தருமென எவரும் சிந்திக்கவில்லை.

இனப்பிரச்சினை.... இனப்பிரச்சினை என்று இனவாதத்தை இரு முனைகளிலும் மேலும் எமது அரசியல் தலைவர்கள் வலுப்படுத்தியமையால் தான் தீராத இனப்பிரச்சினையாக இது தீவிரமடைந்தது.

இனங்களிற்கிடையில் நீண்ட கால இடைவெளி இருந்தமையால் தான் புரிந்துணர்விற்கப்பால் இனப்பிரச்சினை பூகம்பமானது. இதை உருவாக்கிய பெருமை பெருமளவிற்கு எமது தமிழ்த் தலைவர்களையே சாரும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று சென்ற பாதையில் அன்று பயணித்திருந்தால் இத்தனை அப்பாவிப் பிஞ்சுகளை நாம் இழந்திருக்க வேண்டிய அவசியமில்லையல்லவா?..... மாவீரர்கள் என்று இன்று மகிமைப்படுத்தியென்ன பயன்? மாற்றங்கள் இல்லாத அரசியல் பயணத்தில் மடிந்தவர்களாகி விட்டார்களே.....

இந்த நிலை மீண்டும் தமிழினத்தற்கு கனவிலும் கூட வரக்கூடாது என்பது தான் ஒவ்வொருவரினதும் விருப்பம். ஆனால் அது மீண்டும் உருவாகுமா?..... என்கின்ற அபாயங்கள் ஆங்காங்கே உருவாகின்றன.

இன்றைய அரசியல் சூழல் பலருக்கு பல நம்பிக்கைகளை உருவாக்கி வருகின்றது. இந்நம்பிக்கைகளிற்கு நாணயமாக தொடர்ந்தும் அரசியல் தலைவர்கள் இருந்தால் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வின் திசைமுகம் சற்றுத் தெளிவாகும். ஆனால் இந்நிலை மாறி இடர்படுமேயானால் இனவாதம் இலங்கையில் முன்னரை விட மிக மோசமான நிலையில் தீவிரமடையும் என்பதை பலர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் எட்டிப் பார்த்தே தான் ஆக வேண்டும்.

அன்று தமிழரை ஒடுக்கிய தென்னிலங்கை அரசியல் ஆளணிகள் இன்று தமிழ்த் தலைவர்களுடன் இணக்கப் பேச்சுக்கள் பேசுகின்றனர். தமிழ்த் தலைமை நிரந்தரத் தீர்வுப் பேச்சை எடுக்காது என்கின்ற புரிந்துணர்வா?

ஆளுநர் மாற்றமும், மேலும் சில படைவீரர் குறைப்பும் மேலும் சில காணிகள் விடுவிப்பும் மட்டுமே கேட்டுக் கொண்டிருப்பதால் வந்த இணக்கமா?

தற்காலிக அடக்குமுறைகளைத் தகர்த்தெறிந்தால் நிரந்தர தீர்வை தாமாகவே தமிழர்கள் மறந்து விடுவார்கள் என்கின்ற முன் அனுபவமா?....

பாதையைத் திறந்து சுகபோக வாழ்க்கையைக் காட்டினால் விடுதலைப் புலிகளை நிலைகுலையச் செய்துவிடலாம் என்கின்ற அன்றைய வெற்றியின் அடுத்தபடியா இது?...

நிரந்தரத் தீர்வைப் பேசும் நிர்ப்பந்தம் எழும்போது மறுபடியும் எதிர்ப்புக் கோசங்களுக்குள் ஒளிந்துகொள்ளுமா இன்றைய இணக்கம்?...

பல் துருவ சிந்தனைகள் பலமாகப் படையெடுக்கின்றன. பொறுத்திருந்து பார்ப்போம் எதிலும் வெறுப்படையாமல்.....

# தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர் ஒன்றியம் உதயம்

(கொழும்பு)

இலங்கையின் பல்வேறு முகாம்களிலும் சிறைகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள - வடமாகாணத்தைச். சேர்ந்த - அரசியல் கைதிகளினது உறவினர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி 'தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர் ஒன்றியம் -வடமாகாணம்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த அமைப்பின் தலைவராக கிளிநொச்சியைச் சேர்ந்த திருமதி செல்லையா பவளவள்ளி ( தொலைபேசி இலக்கம் 0774823465) செயலாளராக கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லன் விஜயகுமார் ஆகியோர் ( தொலைபேசி இலக்கம் 0771838542) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பதினொரு பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. தற்போதைய புதிய அரசியல் சூழலில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பல தரப்பினருடனும் ஊடாடி, அதனை விரைவுபடுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

வடமாகாணத்தைச் சேர்ந்த அரசியல் கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் தங்களுடன் தொடர்புகொண்டு இந்தக் கட்டமைப்பில் இணைந்து கொள்ளவேண்டும் என ஒன்றியத்தின் தலைவரும் செயலாளரும வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மீண்டும் ஆரம்பமானது நாடாளுமன்ற நேரடி ஒளிபரப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்ட நாடாளுமன்ற நேரடி ஒளிபரப்பு நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நேரடி ஒளிபரப்பு நாடாளுமன்றத்தின் முன்பாக பெரிய திரையில் ஒளிபரப்பப்பட்டது.

எனினும் முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு விண்ணப்பம்

தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் கவுன்ஸிலின் செயலாளர் ஆகியோர் இணைந்தே குறித்த பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் தற்போதைய உப வேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயிலின் பதவிக் காலம் ஜுன் மாதமளவில் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையிலேயே குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

இந்த பதவிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் பதிவாளர், தென் கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கையளிக்க முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை பல்கலைக் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.seu.ac.lk இல் பார்வையிட முடியும்.

## இடமாற்றங்கள் ஒத்திவைப்பு

நாளை முதலாம் திகதி முதல் நடை முறைப்படுத்துவதற்கு இருந்த 10 பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் இடமாற்றம், எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, இந்த பொலிஸ உத்தியோகஸ்தர்களின் இடமாற்றம், மே முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் சுட்டிக்காட்டியது.

## சுதந்திரக் கட்சியில் பஷிலை இணைக்கக் கூடாது

### முன்னாள் அமைச்சர் போர்க்கொடி

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்வந்தவுடன் நாடாளுமன்றத்தை விட்டு தப்பிச் சென்ற முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பினால் அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எந்தவகையிலும் இணைத்துக் கொள்ள வேண்டாம் என கட்சித் தலைமையிடம் முன்னாள் அமைச்சர் ஜனக பண்டாரதென்னகோன் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு முக்கிய காரணம் பஷில் ராஜபக்சவே ஆகும். தேர்தலில் எம்மை பலி கொடுத்து பஷில் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார்.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாசமாக்கினார். தற்போது கட்சியைப் பலப்படுத்தி புதிய உத்வேகமொன்றை வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் தெரிவித்தார்.

## கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை பார்வையிட்ட பிரித்தானிய அமைச்சர்



கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொது நலவாய பணியக அமைச்சர் ஹியூகோ ஸ்வையர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் முகமாலை பகுதிக்குச் சென்று மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுளை அவர்கள் பார்வையிட்டனர்.

அதனை தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

## குடியிருக்கும் காணிக்கு உறுதிப்பத்திரம் வேண்டும்

### கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் ஆற்றுப்பகுதி கிராமத்தில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வீட்டுத்திட்டத்தில் தம்மை உள்வாங்குமாறு கோரி ஊர்வலமாகச் சென்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர்.

இந்த ஆர்பாட்டத்தின் போது "நாங்கள் குடியிருக்கும் காணிகளுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்க வேண்டும்.

புதிய அரசாங்கம், எங்களுக்கு நியாயமான முடிவை கொடுக்க வேண்டும.

எம்மையும் வீட்டுத் திட்டத்தில் இணைக்க வேண்டும்". ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

மகஜரை பொறுப்பேற்ற மாவட்டச் செயலாளர், அவர்களிடம் இந்த விடயம் தொடர்பாக வினவியுள்ளார்.

அதன்போது கிளிநொச்சி குளத்தின் பின்பகுதியான இரத்தினபுரம் ஆற்றுப் பகுதியில் பொதுமக்கள், குடியேறி வசித்து வருவதாகவும் அவர்கள் அந்தக் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களையும் வீட்டுத் திட்டத்தையும் வழங்கும்படி கோரியுள்ளதாகவும் கூறிய அவர்,

இந்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி நியாயத்தன்மை மற்றும் பாதிப்புக்கள் குறித்து ஆராய்ந்து இதற்குரிய சரியான முடிவை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்

## வரவு செலவுத் திட்டத்திற்கு வரவேற்பு

### - வவுனியாவில் வெடிகொழுத்தி மகிழ்ச்சி -



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தினால் 100 நாட்களுக்கான இடைக்கால பட்ஜெட் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அத்தியாவசிய பொருள்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டமையை அடுத்து வவுனியா நகரில் மக்கள் வெடி கொழுத்திக் கொண்டாடினர்.

பட்ஜெட்டில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமை தொடர்பான செய்திகள் வெளியாகியபோது இன,மத,மொழி பேதங்களைக் கடந்து மூவின மக்களும் வெடி கொழுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

### - கல்முனையில் பாற்சோறு வழங்கல் -



நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு - செலவு திட்டத்தில் 13 அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை குறைப்பையடுத்து கல்முனை மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட துஆ பிரார்த்தனையும் பாற்சோறு வழங்கும் நிகழ்வும் கல்முனைக்குடி ஆட்டோ பஸார் சந்தியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகம் முன்பாக இடம் பெற்றது.

கல்முனை ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் எஸ்.எல்.முஹீஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்கள் பலர் கலந்து கொண்டு மகிழ்ச்சியை தெரிவித்ததுடன் ஜனாதிபதிக்கும், நாட்டு மக்களுக்கும் விசேட துஆ பிரார்த்தனையையும் நிகழ்த்தினர்.

## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I

1.30 மணி




# கல்வி முரசு

தரப்பட்ட சதுரமுகியை புரட்டிய அமைப்புக்கு ஏற்ப விடை தருக




01. E க்கு எதிர்திசையில் உள்ள எழுத்து எது?
(I) F (II) C (III) B



02. இலக்கம் 1க்கு எதிரில் உள்ள இலக்கம் யாது?
(I) 6 (II) 5 (III) 3


வித்தியாசமான படத்தின் கீழ் கோடிடுக

03.




(i) (ii) (ii) (iv)

04.




(i) (ii) (ii) (iv)

05.



(i) (ii) (ii) (iv)

06. கீழே தரப்பட்ட அமைப்பை ஒழுங்குமுறைப்படி சேர்க்க பொருத்தமான கூட்ட அமைப்பு யாது?




A B C D

(I) C,B,D,A
(II) C,B,A,D
(III) A,B,C,D



22. உருவில் காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப வெற்றிடத்தை நிரப்புக





23. 1500ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900ml நீரைக்கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது? ...................... ml

24. பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடத்தில் நூல்நிலையத்திற்கு சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் தங்கி இருந்தாள்.
(i) கீதா நூல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்? பிற்பகல் ............ ..............
(ii) அந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக ............ ............ மணித்தியாலம்


25. ஒருகாணியின் 1/ 2 பங்கில் காய்கறிப்பயிர்களும் 1/ 2 பங்கில் பூச்செடிகளும் நாட்டப்பட்டுள்ளன. அவ்வாறு நாட்டப்பட்டுள்ள நிலத்தின் அளவு மொத்தக்காணியில் என்ன பகுதியாகும் ..............................

26. நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை மொத்த உருவின் பரப்பளவின் பின்னமாகக் காட்டுக ..................................



27. 100cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது? .................. cm

28.



(i) உருவில் உள்ள நான்முகியின் உச்சிகளின் எண்ணிக்கை யாது?
..............................................

29. 9999 உடன் 20ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ..............................

30. 9050 இலிருந்து 360ஐக் கழிக்க வித்தியாசம் யாது? ..............................

31. விடுமுறை தினத்தன்று வீதியில் சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன





(i) விடுமுறை தினத்தன்று சென்ற வேன்கள், பஸ்களினதும் கூட்டுத்தொகை எவ்வளவு? ..............................

(ii) அன்றையதினம் வீதியால் சென்ற துவிச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கை யானது.அன்று வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யின் அரைவாசியாகும். அவ் எண்ணிக்கையை உரிய நிரலில் குறிக்குக. அந்நிரலை நிழற்றுக

### நேற்று பிரசுரமாகிய பயிற்சி வினாக்களின் விடைகள்

1. 3 2. 2 3. 1 4. 1 5. 44 6. 7 7. 4 8. ச 9. த 10. ச
11. த 12. 1 13. 2 14. 2 15. 1 16. 3 17. 1 18. E 19. G 20. H
21. B 22. C 23. F 24. 2 25. 2 26. 2 27. 3 28. 1 29. குப்பைமேனி / தொட்டால்வாடி / அகத்தி / மணித்தக்காளி / வேம்பு / கற்றாளை/ 30. விற்றமின் சி 31. மார்க்கோணி 32. ரூபா 33. நீலஅல்லி/ நீலோற்பலம் 34. இலங்கை மத்திய வங்கி 35. 9 36. இரேசா திருஞானம் 37. ஈஸ்வரன் வித்தியாலயம் 38. நான்காம் தரம் 39. திரு.மு.திருஞானம் 40. வலயக்கல்விப் பணிப்பாளர் 41. திருமதி.சுசீலா திருஞானம் 42. ஆசிரியை 43. இரண்டு 44. இரண்டு 45. இசையும் அசையும் 46. B 47. 2 48. 3 49. 2 50. 3 51. 2 52. 3


07. தரப்பட்ட அமைப்பில் எத்தனை பெட்டிகள் உள்ளன.



(I) 24 (II) 15 (III) 18


வெற்றுக் கூட்டினுள் வரும் சரியான விடையை கண்டு கீறிடுக

08.



(i) (ii) (iii)


09.




(i) (ii) (iii)

ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பைப் பெற தரப்பட்ட மூன்று விடைகளுள் எதனைப் பார்த்தால் கிடைக்கும்


10.





(i) (ii) (iii)


11.






(i) (ii) (iii)

12.






(i) (ii) (iii)

கீழே தரப்பட்ட பட அமைப்பை நன்கு அவதானித்து விடை தருக


13. A இன் ஊடாக பார்க்கும் போது கிடைப்பது எது?



A

B


(i) (ii) (iii)






14. B இன் ஊடாகப் பார்க்கும் போது கிடைப்பது எது?


(i) (ii) (iii)



15. தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து விடை தருக



A +




A அமைப்பின் கூட்டுத்தொகை யாது?

(I) 19 (II) 18 (III) 20

16. கீழேயுள்ள A படம் ஆசிரியர் வரைந்தது. B படம் மாணவன் வரைந்தது இதற்கேற்ப மாணவன் வரைந்த படத்தில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடித்து அவ்விடங்களில் (x) என்ற அடையாளத்தை இடுக




A




B

கீழே தரப்பட்ட பட அமைப்பில் வெட்டி அகற்றப்பட்ட இடத்துக்கு வரும் விடை எதுவென கண்டு கீறிடுக


17.




(i) (ii) (iii) (iv)



18.



(i) (ii) (iii) (iv)



19. 2010 ஆம் ஆண்டில் 50ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய மோகன் தனது 30ஆவது பிறந்ததினத்தை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பார்?

20. வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக

| நாணயத் தாள் வகை | நாணயத் தாள் எண்ணிக்கை | பணம் |
|---|---|---|
| ரூபா 50 | 1 | ரூபா 50 |
| ரூபா 20 | ------------------ | ரூபா ------ |
| ரூபா 10 | ------------------ | ரூபா ------ |
| மொத்தம் | 6 | ரூபா 130 |

21. 600 இனிப்புக்களில் 60ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுக்களாக பொதி செய்யப்பட்டன

(i) சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப்பட்ட இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது? ....................

(ii) அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுக்களைத் தயார் செய்யலாம்? ....................





கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது ஓய்வு பெற்ற கிராம அலுவலர் விருந்தினர்களால் கௌரவிக்கப்படுவதனையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (90)

## திறப்பு விழா

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைக் கட்டட திறப்பு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

சுகாதார வளங்களுடன் சிறந்த முறையில் நிர்மாணிக்கப் பட்டுள்ள இச் சந்தைக்கட்டடம் திறக்கப்படுவதால் வியாபாரிகள் நன்மையடையவுள்ளனர்.

தொடர்ந்து அன்றைய தினம் கரணவாய் ஜே/348 கிராம அலுவலர் பிரிவிலுள்ள குடிநீர் திட்டமும் திறந்து வைக்கப்பட வுள்ளது (18)

## நீண்டகால பொருளாதாரக் கொள்கை வரவு செலவுத் திட்டத்தில் இல்லை

முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கம் சமர்ப் பித்திருக்கும் வரவு செலவுத் திட்டம் நீண்டகால பொருளா தாரக் கொள்கையை அடிப்படை யாகக் கொண்டதாக இல் லையென முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித் துள்ளார்.


பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடைக் கால வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அவர் கருத்து வெளி யிட்டார்.

அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்தினை மட்டுமே இலக் காகக் கொண்டு இந்த வரவு செல வுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள் ளது.

அரசாங்கத்தின் செலவு தொடர்பாக கூறும் அதேவேளை அரசாங்கத்துக்கு வருவாயைப் பெற்றுக் கொள்ளும் வழி முறை கள் பற்றி இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட வில்லை.

உலக சந்தையில் மசகு எண் ணெயின் விலை குறைப்பின் காரணமாகவே கடந்த சில நாட்களுக்கு முன்பு அரசாங்கம் எரிபொருளின் விலையைக் குறைத்தது.

அதன் பிரதி பலனையே மக்களுக்கு வழங்கியிருப் பதாக சுசில் பிரேமஜயந்த சுட் டிக்காட்டினார்.



மகாத்மா காந்தியின் நினைவு நாள் நிகழ்வுகள் இந்தியாவில் நினைவு கூரப்பட்ட அதேவேளை நேற்று காலை 9.05 மணியளவில் பருத்தித்துறையிலும் நினைவு கூரப்பட்டது. பருத்தித்துறை நகரத்தில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு பருத்தித்துறை நகராட்சி மன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் மார்க்கு மனுவல் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (40)

## நம்பகத்தன்மையை ஊடகங்கள் பாதுகாக்க வேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தனது கணவரை ஈ.பி.டி.பி.யினர் கடத்திச் சென்றதாக வடமாகாண முதலமைச்சரிடம் பெண் ஒருவர் முறையிட்டதாக ஊடகங்களில் வெளியாகிய செய்தி அடிப்படை ஆதாரமற்ற தாகும். இந்தச் செய்தி தொடர்பாக சில கேள்விகளுக்கு அந்தச் செய்தியில் போதிய தரவுகள் இல்லை. அதாவது கணவரை ஈ.பி.டி.பி கடத்தியதாக முறைப்பாடு செய்த பெண் யார்? என்பது குறிப் பிடப்படவில்லை. காணாமற் போனதாக கூறப்படும் அந்தப் பெண்மணியின் கணவரின் பெயர் என்ன? எந்தக் கால கட்டத்தில் எப்போது காணாமற் போயிருந்தார்? என்பது பற்றிய எந்த தகவலும் அந்தச் செய்தியில் இல்லை. இவ்வாறான அவதூறு ஏற்படுத்தும் செய்தியை வன்மையாகக் கண்டிக்கின் றோம் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரி வித்துள்ளார்.**

மேற்படி செய்தி குறித்து அவர் ஊடகங்களுக்கு விடுத் துள்ள கண்டன அறிக்கையில், நெடுந்தீவுக்கு அண்மையில் திடீரென சென்றிருந்த வட மாகாண முதலமைச்சர் விக் னேஸ்வரன் தலைமையிலான குழுவினரிடம் மக்கள் பல்வேறு தேவைகள் குறித்து கோரிக்கை விடுத்தனர்.

அவற்றுக்கு பொருத்தமான பதில்களை வழங்காமல் முதல மைச்சர் தாம் முன்னதாகவே தயாரித்துக் கொண்டு வந்திருந்த அறிக்கையை மட்டுமே வாசித் திருந்தார்.

முதலமைச்சரிடம் பெண் மணி ஒருவர் ஈ.பி.டி.பி குறித்து முறையிட்டதாகக் கூறப்பட்ட செய்தியில், செய்திக்குரிய குறைந்தபட்ட தரவுகள் கூட உள்ளடங்கியிருக்கவில்லை. அந்த அறிவு கூட இல்லாத ஒருவர் வழங்கிய எழுந்த மான மான தகவலைப் பொறுப்புள்ள தேசிய பத்திரிகைகள் செய்தி யாக பிரசுரித்திருந்தமை அப் பத்திரிகைகளின் நம்பகத்தன் மைக்கு இழுக்காகும் என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊடகங்கள் செய்திகளை உறுதிப்படுத்தி மக்களுக்கு வழங்க வேண்டுமென நாம் நீண் டகாலமாகவே கூறிவருகின் றோம். இப்போதும் அதேபோன்ற தொரு தவறு மீண்டும் நடந்தி ருக்கின்றது.

கணவர் கடத்தப்பட்டதாக அந்தப் பெண்மணி அவ்வாறான தொரு முறைப்பாட்டை இதற்கு முன்னர் எங்கும் செய்திருக்க வில்லையா? என்ற கேள்விக்கு விடை தெரியாது. அப்படியாயின் வடமாகாணத்தில் ஊடகம் என்ற போர்வைக்குள் தகுதியற்ற வர்கள் மறைந்து கொண்டு மக்களுக்கு தவறான செய்தி களை வழங்கி வருகின்றார்கள் என்பதற்கு இந்தச் செய்தி நிகழ்கால சான்றிதழா? என்ற கேள்வியும் உண்டு.


தமிழ்த். தேசியக் கூட்டமைப் பின் கைக்கூலிகளில் ஒருவரே நிருபர் என்ற போர்வையில் ஈ.பி.டி.பி மீது அவதூறு சுமத்தும் இவ்வாறான செய்தியை வழங் கியிருக்கின்றார்.

நான் நெடுந்தீவில் பிறந்து அந்த மக்களுடன் வாழ்பவன். அவர்களின் துயரங்களிலும், சந்தோஷங்களிலும் பங்கெடுப் பவன்.

நேற்று நெடுந்தீவுக்கு சுற்றுலா வந்தவர்கள், ஈ.பி.டி.பி மீது ஆதாரமற்ற அவதூறுகளைப் பரப்புவதை வன்மையாக கண்டிக கின்றோம். அரசியல் பேதங்க ளுக்கப்பால் யார், உதவிகளை வழங்கினாலும் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று எமது மக்களுக்கு நாகரிகத்தை நாம் கூறியிருக்கின்றோம். நீங்கள் முடியுமாக இருந்தால் நாம் செய்த சேவைகளை விடவும் அதிகமாக மக்களுக்குச் செய் யுங்கள்.

சேவைகளுக்கூடாகப் மக்க ளிடம் செல்லுங்கள். அர்த்தமற்ற அவதூறுகளைப் பரப்பி அரசி யல் இலாபம் தேடமுற்படா தீர்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஊடக அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

## மயிரிழையில் தப்பியது டீசல் பவுஸர்



(கொழும்பு)

கொழும்பு முதுராஜவெல விலிருந்து கொட்ட கலை நோக்கிச் சென்ற பவுஸர் ஒன்று விபத்துக் குள்ளாகியுள்ளது.

கொழும்பு - ஹட்டன் பிரதான வீதி, வட்டவளை பகுதியில் வைத்து அதிகாலை 05.00 மணி யளவில் குறித்த பவுஸர் வீதியை விட்டு விலகியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த பவுஸர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந் தமானது எனவும், கொழும் பிலி ருந்து கொட்டகலையில் உள்ள பெற்றோலிய களஞ்சிய சாலைக்கு டீசலைக் கொண்டு செல்லும் போதே இது விபத் துக்குள்ளானது எனவும் தெரிய வந்துள்ளது.

மேலும் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்பட வில்லையெனவும் இதில் 33,000 லீற்றர் டீசல் இருந்ததாகவும் வட் டவளை பொலிஸார் தெரி வித்தனர்.

## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

........................

பெற்றோர் கையொப்பம்

# ஆப்கான் தலிபான்கள் குறித்த அமெரிக்காவின் கருத்தால் சர்ச்சை



ஆப்கானிஸ்தானில் செயற்பட்டு வரும் தலிபான்களை ஆயுத மேந்திய கிளர்ச்சியாளர்கள் என்று அமெரிக்கா கூறியுள்ளது. அதே வேளையில், இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) குழுவை பயங்கரவாத இயக்கம் எனத் தெரிவித்தது.

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை உதவி செய்தித் தொடர்பாளர் எரிக் ல்ட்ஸ்கடந்த புதன்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போதே இந்தக் கருத்தை தெரிவித்தார்.

ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த விமானியை ஐ.எஸ். ஐ.எஸ். இயககத்தினர் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்துள்ளனர். ஜோர்தானில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பெண் பயங்கரவாதி சஜிதா அல்-ரிஷாவியை விடுவித்தால் விமானியைப் பரிமாற்ற முறையில் விடுவிப்போம் என ஐ.எஸ். ஐ.எஸ்.அறிவித்தது.

அப்போது ஜோர்தான விமானி விவகாரம் இது போன்றதுதானா என செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு வெள்ளை மாளிகை உதவி செய்தித் தொடர்பாளர் எரிக் ல்ட்ஸ் பதில் கூறுகையில், இந்தப் பிரச்சினை முன்பே விரிவாக விவாதிக்கப்பட்டது என்றும் போர் முடியும் தருவாயில், கைதிகள் பரிமாற்றம் என்பது வழக்கமானதுதான் என்றும் கூறினார்.

அப்போது, தலிபான்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களை ஆயுத மேந்திய கிளர்ச்சியாளர்கள் என அவர் கூறினார்.

தலிபான்கள் ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்கள். இஸ்லாமிய தேசமானது (ஐ.எஸ்.) பயங்கரவாதக் குழுவாகும். பயங்கரவாதக் குழுக்களின் மிரட்டல்களுக்கு அமெரிக்கா அடிபணிவதில்லை என்றும் கூறினார்.

# கோட்சேக்கு சிலை வைக்க முயற்சி
## பொலிஸார் தடை உத்தரவு பிறப்பிப்பு

(மீரட்)



மகாத்மா காந்தி கடந்த 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம திகதி கோட்சேயால் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்று அவரது நினைவு தினம் தியாகிகள் தினமாக கடைப்பிடிக்கப் பட்டது.

இதற்கிடையே மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கோட்சேக்கு சிலை வைக்கப் போவதாக இந்தியாவின் உத்தரபிரசேதத்தில் இந்து மகா சபை அறிவித்து இருந்தது. இதற்கு பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்தன.

என்றாலும் கோட்சேக்கு சிலை வைக்க உத்தரப் பிரதேசத்தில் பல்வேறு இடங்களை இந்து மகா சபா தேர்வு செய்து வந்தது ஆனால இடத்தை அந்த அமைப்பு ரகசியமாக வைத்துள்ளது. கோட்சேக்கு சிலை வைக்க மாநில அரசு ஏற்கனவே தடை விதித்து உள்ளது. பல்வேறு இடங்களில் சிலை வைக்கும் முயற்சியையும் பொலிஸார் தடுத்து விட்டனர் இந்த நிலையில் மீரட்டில் நேற்று காந்தி நினைவு நாளில் கோட சேக்கு சிலை வைக்கப் போவதாகவும் இடத்தை இந்து மகா சபை ரகசியமாக வைத்து இருப்பதாகவும் தகவல் வெளியானது.

மேலும் சீதாபூர் மாவட்டத்தில் கோட்சேக்கு கோவில் கட்டும் பணி தொடங்கும் என்றும் அந்த அமைப்பு பகிரங்கமாக அறிவித்தது. இதையடுத்து சீதாபூரிலும் மீரட்டிலும் பொலிஸ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பெண் தீவிரவாதியை கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கை

பிரித்தானியாவில் பல தாக்குதல்களை நடத்தி தலைமறைவாக இருக்கும் அல்கொய்தா பெண் தீவிரவாதியை விரைவில் பிடிக்க நடவடிக்கைகளை தீவிரபடுத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

லண்டனில் கடந்த 2005ஆம் ஆண்டு நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 52 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு காரணமான Samantha Lewthwaite (30) அவருடைய கணவர் Germaine Lindsay உள்பட நால்வர் பிரித்தானியாவிலிருந்து தப்பி தற்போது தலைமறைவாக உள்ளனர்.

அவரை பிடிக்க பொலிசார் தீவிரமாக உள்ள நிலையில் அல்-ஷபாப் தீவிரவாத இயக்கத்தின் முன்னாள் தலைவர் Zakariye Ismail Hersi, Samantha Lewthwaite-ஐப் பிடிக்க உதவ முன்வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

Zakariye Ismail Hersi அனுப்பியுள்ள தகவலில் Samantha தற்போது கென்யா-சோமாலியா எல்லையில் உள்ள Ras Kiyamboni என்ற தீவிரவாத அமைப்பின் தற்கொலை படையினரின் பாதுகாப்பில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், அல்கொய்தாவுடன் தொடர்புடைய ஒரு தீவிரவாத அமைப்பில் Samantha முக்கிய தலைவராக இருக்கிறார் என்றும், தீவிரவாதிகளை தாக்குதலுக்கு அனுப்புவது, கென்யாவில் பல தாக்குதல்களை நடத்திவரும் இயக்கத்திற்கு உதவுவது என பல குற்றங்கள் அவர் மீது உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸாரின் தற்கொலையை தடுக்க பிரான்ஸில் புதிய திட்டம் அமுல்

பொலிஸார் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்வதை தடுக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேசிய உள்துறை அமைச்சர், Bernard Cazeneuve, கடந்த சில ஆண்டுகளாக காவற்துறையில் பணியாற்றும் பொலிஸார் தற்கொலை செய்துக்கொள்வது வேதனை அளிக்கிறது.

இந்த தற்கொலையை தடுக்க காவற்றுறையில் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இதன் அடிப்படையில் பொலிஸ் பிரிவிற்கு கூடுதலாக 7 உளவியலாளர்களும், பொலிஸ் பயிற்சி பள்ளிகளுக்கு சில உளவியலாளர்களும் நியமிக்கப்படுவார்கள்.




மேலும், பொலிஸ் நிலையங்களில் ஒவ்வொரு பொலிசுக்கும் தனிப்பட்ட லாக்கர்கள் அமைத்து தரப்படும் என்றும், பணியை முடித்துவிட்டு துப்பாக்கிகளை வீட்டிற்கு கொண்டு செல்லாமல் அந்தந்த லாக்கர்களில் வைத்து விட்டு செல்லும் வகையில் ஏற்பாடுகள் செயயப்பட்டுள்ளன. ஏனெனில் கடந்த ஆண்டுகளில் 40, 43 என இருந்த பொலிஸாரின் தற்கொலை எண்ணிக்கை 2014ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 56 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களின் தற்கொலைக்கு அவர்களின் குடும்ப பிரச்சனைகளே பெரும்பாலான காரணங்களாக இருந்திருந்தாலும், அவர்களின் வேலைப்பளு, உயர் அதிகாரிகள் மூலம் ஏற்படும் மன உளைச்சல், போதிய பாதுகாப்பு இல்லாமை உள்ளிட்டவைகளும் அவர்களின் தற்கொலைக்கு காரணமாக அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.





# விபத்துக்குள்ளானது விமானம் மலேசிய அரசு அறிவிப்பு

மலேசியன் ஏர்லைன்சுக்கு சொந்தமான எம்.எச். 370 என்ற விமானம், கடந்த ஆண்டு மார்ச 8ஆம் திகதி, தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனாவின் பெய்ஜிங்கை நோக்கி சென்றது. இதில் 5 இந்தியர்கள் உட்பட மொத்தம் 239 பேர் இருந்தனர். புறப்பட்டுச் சென்ற ஒரு மணி நேரத்தில், தொடர்புகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டு, விமானம் மாயமானது. அதனை கண்டுபிடிக்கும் பணியில் சர்வதேச நாடுகள் ஈடுபட்டன. இந்த் நிலையில், மாயமான மலேசிய விமானம் விபத்துக்குள்ளானது என்று, அந்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சர் அசாருதீன் அப்துல் ரஹ்மான் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். இதையடுத்து, தேடுதல் வேட்டை கைவிடப்பட்டுள்ளது.

மேலும், விமானத்தில் பயணித்த 239 பேரும் உயிரிழந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான இழப்பீடு மற்றும் காப்பீடு தொகையை உறவினர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மலேசிய அரசு மேற்கொண்டு வருகிறது. கடந்த ஜுலை 17ஆம் திகதியன்று நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் இருந்து கோலாலம்பூருக்கு சென்று கொண்டிருந்த மலேசிய விமானத்தை, உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தினர் இதில், 298 பேர் உயிரிழந்தனர். கடந்த மாதம் 28ம் தேதி, இந்தோனேசியாவில் இருந்து சிங்கப்பூருக்கு சென்று கொண்டிருந்த ஏர்ஆசியா விமானம் விபத்துக்குள்ளானதில், 162 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நவாஸ் ஷெரீப்பின் சொத்து 3 ஆண்டுகளில் 220 கோடி



(இஸ்லாமாபாத்)

கடந்த, 2014ஆம் ஆண்டு நிலவரப்படி, பாக்கிஸ்தான், பிரதமர் நவாஸ் ஷெரீப் சொத்து மதிப்பு, 236 கோடி ரூபாயாக 'அதிகரித்துள்ளது. இவர், கடந்த 2011ஆம் ஆண்டு வெளியிட்ட சொத்து மதிப்பு, வெறும்,16 கோடி ரூபாய மட்டுமே. ஆக, மூன்று ஆண்டுகளில், இவரது சொத்து மதிப்பு, 219.40 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.பரம்பரை சொத்துக்கள், குடும்ப தொழில்கள், முதலீடு, பங்குகள் போன்றவற்றால் இது சாத்தியமாகியுள்ளது. குறிப்பாக, இங்கிலாந்தில் வசிக்கும் தன் மகன் ஹுசேன் நவாஸ், தனக்கு பெரும் பணம் அனுப்புவதாக நவாஸ் தெரிவிக்கிறார்.

அதே சமயம், இவருக்கு வெளிநாட்டில் எந்த சொத்தும் கிடையாதாம் இதை விட வேடிக்கை, பாக்கிஸ்தானில் இவருக்கு சொந்தமாக வீடு கூட இல்லையாம் தாயார் வீட்டில் தான் வசிக்கிறாராம் நவாஸுடன் ஒப்பிடும் போது, அவரது தம்பி ஷாபாஸ் ரொம்பவே ஏழை எனலாம். பாகிஸ்தானில், பஞ்சாப் மாகாண முதலமைச்சராக உள்ள இவரது சொத்து மதிப்பு, 26.22 கோடி ரூபாய். இது, பாக்கிஸ்தான், மற்றும் இங்கிலாந்தில் உள்ள சொத்துக்களின மதிப்பாகும். அதேசமயம், இவருக்கு, 13.02 கோடி ரூபாய் கடன் உள்ளது. அதை கழித்தால், இவரது சொத்து மதிப்பு, 13.20 கோடி ரூபாயாக உள்ளது. பாக்., அரசியல் தலைவர்களின் சொத்து மதிப்பில் நவாஸ ஷெரீப், இரண்டாவதாகவும் (முன்னாள் அதிபர் சர்தாரி முதலிடம்), பெரும் பணக்காரர்கள் வரிசையில் ஐந்தாவதாகவும் உள்ளார். பாகிஸ்தானின் பெரும் பணக்காரர்களில், தொழிலதிபர் ஷாகித்தான் முதலிடத்தில் உள்ளார்.

# இந்தியாவில் அமைதி நிலவுவதற்கு காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்
## பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவ, காஷ்மீர் பிரச்சினக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியம்" என பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் அய்ஸாஸ் அகமது சௌத்ரி நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூறினார்.

தலைநகர் இஸ்லாமாபாதில், ஐ.நா. பாதுகாப்புக் குழு நிரந்தர உறுப்பு நாடுகள், ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளின் தூதர்களிடையே அவர் பேசியதாவது,

காஷ்மீரில் சுய அதிகாரத்துக்காக நடைபெறும் போராட்டம், வெளிநாடுகளின் தூண்டுதலால் நடைபெறுவதல்ல.

அது அந்தப் பகுதி மக்களின் போராட்டம்.

அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால்தான் இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவும் என்றார் அவர்.

# வெளியானது புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை பிரபல்யமான பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கான வெட்டுப் புள்ளிகளை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகளின் விபரங்கள்.

| No. | School Name | Address | Cut-off mark |
|---|---|---|---|
| 1 | D.S.Senanayaka V. | Colombo 7 | 174 |
| 2 | St. Michael V. | Batticalao | 173 |
| 3 | Hartley College | Point Pedro | 165 |
| 4 | Jaffna Hindu College | Jaffna | 165 |
| 5 | Hindu College | Colombo 4 | 162 |
| 6 | Sivananda V. | Batticaloa | 161 |
| 7 | Sri Koneswara Hindu College | Trincomalee | 161 |
| 8 | Oddamavadi M.M.V. | Oddamavadi | 159 |
| 9 | St. Henry V. | Ilavalei | 159 |
| 10 | Zahira College | Sainthamaruthu | 158 |
| 11 | Zahira College | Matale | 152 |
| 12 | Methodist College | Batticaloa | 151 |
| 13 | Al Humaisara Muslim M.M.V. | Beruwala | 150 |

| No. | School Name | Address | Cut-off mark |
|---|---|---|---|
| 1 | Muslim Ladies College | Colombo 4 | 174 |
| 2 | Bad Uddin Mahamud Balika V. | Kandy | 170 |
| 3 | Mahamud Ladies College | Kalmunai | 166 |
| 4 | Vembady Girls'High School | Jaffna | 164 |
| 5 | St. Mary's College | Trincomalee | 161 |
| 6 | Jaffna Hindu Ladies College | Jaffna | 158 |
| 7 | Good Shepard Balika V. | Colombo 13 | 158 |
| 8 | Manipai Ladies College | Manipai | 158 |
| 9 | Amina M.V. | Matale | 156 |
| 10 | St. Cecilia's College | Batticaloa | 156 |
| 11 | Rambaikulam Girls V. | Vavunia | 154 |
| 12 | Methodist Girls High School | Point Pedro | 151 |
| 13 | Al Marjan Muslim Ladies College | Sammanthurei | 151 |
| 14 | Fathima Muslim Balika V. | Puttalam | 148 |

| No. | School Name | Address | Cut-off mark |
|---|---|---|---|
| 1 | Cambridge V. | Kotagala | 168 |
| 2 | Al Minhaj Muslim V. | Hapugastalawa | 165 |
| 3 | Kokuvil Hindu V. | Kokuvil | 162 |
| 4 | Zahira Muslim M.M.V. | Mawanelle | 162 |
| 5 | Vishvamadu M.V. | Mullativu | 162 |
| 6 | Zahira College | Puttalam | 161 |
| 7 | Kekunagolla M.M.V. | Kekunagolla | 160 |
| 8 | Madeena M.M.V. | Madawala Bazar | 159 |
| 9 | Vavunia Tamil M.M.V. | Vavunia | 159 |
| 10 | Akkarapattu Muslim M.V. | Akkarapattu | 158 |
| 11 | Madeena M.M.V. | Siyambalagaskotuwa | 158 |
| 12 | St. Joseph Tamil School | Maskeliya | 158 |
| 13 | Veerasingham M.M.V. | Meesalei | 158 |
| 14 | Chavakachchery Hindu College | Chavakachchery | 158 |
| 15 | Al Ashraq M.M.V. | Ninthavur | 154 |
| 16 | Aligar M.M.V. | Eravur | 152 |
| 17 | Al Manar M.M.V. | Handessa | 151 |
| 18 | Vipulanantha M.M.V. | Karaithivu | 151 |
| 19 | Sri Ramakrishna V. | Akkarapattu | 151 |
| 20 | Saraswathy M.M.V. | Badulla | 150 |
| 21 | Wesley High College | Kalmunei | 150 |
| 22 | Thambiluvil M.M.V. | Thambiluvil | 150 |
| 23. | Talawakele Tamil M.V. | Talawakele | 150 |
| 24 | Orr's Hill Vivekananda V. | Trincomalee | 150 |
| 25 | Pethalei Vipulananda M.V. | Valachchenai | 150 |
| 26 | Erukkalampiddi Muslim M.M.V. | Mannar | 150. |

# குற்றம் புரிந்தவர்கள் மீது பாரபட்சமற்ற நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபர் உத்தரவு

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை தராதரம் பாராது கைது செய்ய வேண்டுமென பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது விசாரணைகளின் மூலம் நிருபிக்கப்பட்டால் தராதரம் பாராது அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அனைத்து விசாரணைகளும் சட்டத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. யார் குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் அவர்களைப் பாதுகாக்காது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்துக் கைதுகளும் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். தற்போது மூன்று முக்கியமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அலரிமாளிகையில் இடம்பெற்ற சூழ்ச்சித் திட்டம், ஜனாதிபதி செயலக வாகனங்கள் காணாமற் போனமை மற்றும் வெலோ சுதா போதைப்பொருள் வர்த்தகம் ஆகியன தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றன என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு செய்யப்பட்டும் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று பொலிஸ்மா அதிபரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா.வுடன் ஒத்துழைக்கும் போக்கு; புதிய அரசு மீது மூன் நம்பிக்கை

வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்து விசாரிப்பதற்கு உள்நாட்டு விசாரணை முறைமை ஏற்படுத்தப்படும் என இலங்கை அரசு அறிவித்த போதிலும், இவ்விடயம் தொடர்பான ஐ.நா. விசாரணைகளிலும் இலங்கை அரசு இணைந்து பணியாற்றும் என ஐ.நா. செயலாளர் நாயகம் நம்புகிறார் என அவரது பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்தார்.

ஐ.நா. விசாரணை விடயத்தில் இலங்கை எவ்வாறான ஒத்துழைப்பை வழங்கும் என்பது குறித்து ஐ.நா. அறிய முயன்று வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். யுத்தம் தொடர்பில் உள்நாட்டு விசாரணை முறைமை ஒன்று ஆரம்பிக்கப்படும் என நேற்று அறிவித்துள்ள இலங்கை அரசு, தேவைப்பட்டால் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியையும் அதற்குப் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருந்தது. நாங்கள் இந்தத் தகவல்களை அதிகரித்துள்ளோம். ஐ.நா. மனித உரிமைகள் விடயத்தில் ஒத்துழைப்பது என்ற கூற்றின் மூலம் எதனை வெளிப்படுத்த முயல்கிறார்கள் என்பதை நாம் அறிய விரும்புகிறோம். என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கான விசாரணை விடயத்தில் இலங்கை அரசுக்கும் ஐ.நா முறைமைக்கும் இடையில் ஒத்துழைப்பது சம்பந்தமாக ஆக்கபூர்வமான முன்நகர்வு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம் என்றார்.

# பதவியில் தொடர்ந்தும் இருக்க பேரம் பேசினாரா மொஹான் பீரிஸ்?

## ராஜித தருகிறார் தகவல்

தொடர்ந்தும் தன்னைப் பிரதம நீதியரசராக்ச் செயற்பட அனுமதிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், 44 ஆவது பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸ் கோரியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சர் ராஜித சேனாரத்ன இதுபற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளார்.

மொஹான் பீரிஸ் தன்னிடம் தொலைபேசியில் பேசியதாக, அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தகவல் வெளியிட்டார்.

## பொருளாதார....

நீண்ட கால, குறுகிய கால பொருளாதாரக் கொள்கைகள், தந்திரோபாயங்களை இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் காண முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஊடக சுதந்திரம்...

நலன்புரிக் கிராமம் ஆகியவற்றை பார்வையிட்டார்.

வடமாகாணத்தில் பல்வேறு பரிமாணம் கொண்ட பிரச்சினைகளை நான் அறிந்து கொண்டேன். நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், இராணுவத் தின் வகிபாகம், அரசியல் தீர்வுக்கான வாய்ப்புகள், இலங்கைக்கு பிரித்தானியா உதவக்கூடிய வழிமுறைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முதலமைச்சருடன் பேசினேன்.

அதுமட்டுமன்றி மீண்டும் யுத்தத்துக்கு பலியாகக் கூடாதென்பதை வலியுறுத்தும் சின்னமாக ஆனையிறவு உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

## காணி அதிகாரம்...

வர்களுக்கு மாத்திரமான நாடு இல்லை.

தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடு.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்த பின்னர் அம்பாந்தோட்டையில் சென்று இனவாதத்தையே பேசினார்.

அவ்வாறான இனவாதமே நாட்டைப் பிளவடையச் செய்யும் என்று கூறினார்.

## மொஹான்,....

கூறுவதற்காக தாம் வந்ததாக அவர் என்னிடம் சாதாரணமாக பதில் கூறினார்.

அதிகாலை 2.30 மணியளவில் தாம் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்ட போது, ஏற்கனவே மொஹான் பீரிஸ் அங்கு நின்று கொண்டிருந்ததாக, சட்டமா அதிபர் என்னிடம் தகவல் கூறினார்.

பின்னர் மொஹான் பீரிஸ் என்னைத் தொலைபேசியில் அழைத்து, எதிர்கால வழக்குகளின் போது, அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தாம் விரும்புவதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க வேண்டும் என்றும் கேட்டார்.

பின்னர் அவர், தமக்கு இராஜதந்திரப் பதவி தந்தால், தாம் பதவியில் இருந்து விலக விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர், நான் வெளிவிவகார அமைச்சரிடம் வெளிநாடுகளில் உள்ள தூதுவர் பதவி வெற்றிடங்கள் குறித்து விசாரித்து விட்டு, வியட்நாம் அல்லது பிரேசிலுக்கான தூதுவராக நியமிக்கலாம் என்று கூறினேன்.

ஆனால் அவர், ரோமுக்கான தூதுவர் பதவியையே கோரினார்.

பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பாக எந்த விவாதத்தை எதிர்கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடாளு மன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக சபை 20 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவி விலக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பிர[illegible]ர் ரணில் விக்ரமசிங்க பிரதம நீதியரசர் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்டவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனால் சபையில் குழப்ப நிலைமை ஏற்பட்டது. இதனை அடுத்து அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

# மணல் விநியோக தொழிலாளர்கள் பிரதேச செயலகம் முன்னால் போராட்டம்



வடமராட்சி கிழக்கில் மணல் ஏற்றும் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டு இயங்கும் 1000 கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மணல் சேவையில் ஈடுபடும் வடமராட்சி கிழக்கு மக்கள் மருதங்கேணி பிரதேச செயலகம் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது கலந்து கொண்டவர்கள் இருபது வருடங்களுக்கு மேலாக மணல் விநியோகத்தினையே தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருவதாகவும் தற்போது கடந்த 5 வருடங்களாக மகேஸ்வரி நிதியம் அகழ்வு அனுமதியினை பெற்றபின் அவர்களுடன் இச் சேவையில் ஈடுபடுகின்றோம். ஆனால் தற்போது நிகழ்ந்துள்ள அரசியல் மாற்றத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மகேஸ்வரி நிதியத்தினை அகற்றி வேறு நிறுவனத்தின் ஊடாக மணல் விநியோகத்தினை நடாத்த ஒழுங்குபடுத்தி தருவதாக கூறி தடுத்து நிறுத்தி வருகின்றது.

ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லாது வெறும் எதிர்ப்பு ஆர்பாட்டத்தினையே நடாத்தி வருகின்றது. இதனால் எமது வாழ்க்கைச் செலவை கொண்டு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்படும் நிலையில் உள்ளதாகவும், லீசிங்கில் கொள்வனவு செய்த உழவு இயந்திரங்கள் பறிமுதலாகும் அபாயத்தில் உரிமையாளர்கள் உள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் அன்றாடம் மணல் ஏற்றி உழைப்பவர்களும் சாரதிகளும் மிகவும் கஷ்டத்திற்குள்ளானதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அரசியல் பழிவாங்குதலிற்கு அப்பாவி மக்களை பலிக்கடாவாக்காதே, 10 நாட்களில் வாழ்வாதாரம் தருவதாக கூறியவர்கள் எங்கே? மணல் சேவையே எங்கள் வாழ்வாதாரம் என்ற பல கோஷ மட்டைகளுடன் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு மகஜர் ஒன்றினை பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கையளித்துள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதேச செயலர், மணல் விநியோகத்தினை நாம் தடுத்து நிறுத்தவில்லை எனவும் தங்களின் கோரிக்கைகளினை உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

# இறுதிப் போட்டியில் இங்கிலாந்து நடையைக் கட்டியது இந்தியா

நேற்று இடம்பெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்தியாவுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து களத்தடுப்பை தெரிவு செய்தது. இதைத் தொடர்ந்து இந்திய அணி துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக தவானும், ரஹானேவும் களமிறங்கினர். இருவரும் நிதானமான ஆட்டத்தை கடைப்பிடித்தனர். தவான் 38 ஓட்டங்களை எடுத்திருந்தபோது வோக்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த வீரர்கள் அடுத்தடுத்து தங்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர்.

பின்னர் நிதானத்துடன் விளையாடிய ரஹானேவும் 73 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். கடைசி விக்கெட்டுக்கு களமிறங்கிய முகமது ஷமி 18 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்து அவுட்டானார். இறுதியில் இந்திய அணி 48.1 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

வெற்றிக்கு 201 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில் இங்கிலாந்து அணி தனது இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக பெல்லும், மொயீன் அலியும் களமிறங்கினர்.

இருவரும் பெரிதும் சோபிக்காத நிலையில் அடுத்தடுத்து 10 மற்றும் 17 ஓட்டங்களில் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

அடுத்து வந்த டெய்லர் நிதானமான ஆட்டத்தை கடைப்பிடித்தார். ஆனால் அடுத்து வந்த ரூட் (3), மோர்கன் (2), பொபாரா (4) பின்னியின் பந்துவீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் இங்கிலாந்து அணி 66 ஓட்டங்களுக்குள் ஐந்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

பின்னர் வந்த பட்லர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 82 ஓட்டங்கள் எடுத்திருந்த போது டெய்லர் அவுட்டானார். சிறிது நேரத்தில் 67 ஓட்டங்கள் குவித்த பட்லரும் அவுட்டானார்.

எனினும் பொறுமையாக விளையாடிய வோக்ஸ், பிராடும் ஆட்டமிழக்காமல் 46.5 ஓவரிலேயே 201 ஓட்டங்கள் குவித்து இங்கிலாந்து அணியை வெற்றி பெற வைத்தனர். இதனால் இங்கிலாந்து அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இந்திய அணி முத்தரப்பு தொடரிலிருந்து வெளியேறியது. வரும் பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டி யில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன.

# வெதுப்பக உற்பத்திகள்; விலை குறைக்க ஏற்பாடு

பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகளையும் குறைப்பது தொடர்பில் ஆராய்வதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் கோதுமை மாவின் விலை 12 ரூபா 50 சதத்தினால் குறைக்கப்பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் கூறினார். இதேவேளை முச்சக்கரவண்டி கட்டணங்களை 10 சதவீதத்தாலும், பாடசாலை வான்களுக்கான கட்டணங்களை 5 வீதத்தாலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உள்ளக போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தக் கட்டண முறை பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# முச்சக்கர வண்டி கட்டணம் பத்து வீதம் குறைப்பு

முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணத்தை 10 வீதத்தினால் குறைப்பதற்கு முச்சக்கரவண்டி சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக உள்ளக போக்குவரத்து அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கட்டணத் திருத்தம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

# உள்ளக விசாரணை மீது எமக்கு நம்பிக்கை இல்லை

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைமையில் நம்பிக்கை கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. யுதத்க் குற்றச் செயல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் உள்நாட்டு விசாரணைகளின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என தெரிவித்துள்ளது.

கடந்த கால உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைமைகள் வெற்றியளிக்கவில்லை எனவும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணை அறிக்கை வெளியிடப்படும் வரையில் தமிழ்ச் சமூகம் காத்திருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச் மாத அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படுவதனை தமாதப்படுத்த சிலர் முயற்சித்து வருவதாக தெரிவித்துள்ள்ரார்.

விசாரணை அறிக்கை அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படுவதனை ஐக்கிய நாடுகள் அமைப்பும் அமெரிக்காவும் உறுதி செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் அல் ஹுசெய்னினால் இந்த மார்ச் மாத அமர்வுகளில் விசாரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றின் மூலம் கிரமமான விசாரணை நடத்தப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு பலருக்கு பறிபோகும் அபாயம்

## காத்திருக்கிறது நெருக்கடி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காது போகும் அபாயம் இருப்பதாக தெரியவருகிறது.

இவர்களில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, நிஷாந்த முத்துஹெட்டிகம, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, அருந்திக்க பெர்ணான்டோ, கருணா அம்மான், துமிந்த சில்வா, ரோஹித்த அபேகுணவர்தன, சரண குணவர்தன ஆகியோர் முக்கியமான நபர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு எதிராக ஊழல், மோசடிகள் உட்பட ஏனைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால், தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என தெரியவருகிறது.

இது தொடர்பில் எமக்கு கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தன்னிடம் உறுதியளித்திருப்பதாக தெரிவித்தார்.

இதனை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு பெறுவதற்காக அமைச்சர் ராஜித சேனாரத்னவை பின்தொடர்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொலிஸாரின் இடமாற்றங்கள் இப்போதைக்கு இல்லை

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த 10,000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளன.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிவரை பொலிஸ் உத்தியோக்கதர்களின் இடமாற்றங்கள் பற்போடப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

10,000 பொலிஸாருக்கு வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில், ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றங்களை முன்னெடுக்குகுமாறு உத்தரவிடப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதால் அந்த இடமாற்றங்கள் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இடமாற்றங்களுக்கு எதிராக சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேன்முறையீடு செய்துள்ள நிலையில், அதற்கான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியுள்ளதாக அஜித் ரோஹன கூறினார்.

இதன்பொருட்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் மே மாதம் முதலாம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளன.

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0776289655.

(C4000)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.